விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ பங்குனி மீ 09-ம் உ | வியாழக்கிழமை | (22 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 24 | ஓசை 32

## ஒரிஸா தமிழ்க் குழு அகதிகள் சட்டசபை விவாதிக்க சம்மதம்!

(புவனேஸ்வர்)

ஒரிஸ வில் தற்போது தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை குறித்து ஒரிஸா சட்டப்பேரவையில் விவாதிக்கப் டும் என ஒரிஸா மாநில முதலமைச்சர் பட்நாய்க் சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

இது குறி து விவாதிக் ப்பட வேண்டும் என தான் அறிக்கை எதனையும் அளிக்கவில்லை என்றும் முதலமை ச்சர் கூறினார்.

இ ே தமிழ்க் குழு அ கதிகள் பிரச்சனை நேற்று முன்தினம் சட்ட சபையில் எடுக்கப்பட்டு பெரும் சர்ச்சையையும் அமளியையும் ஏற்படுத்தியிருந்த து.

பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்களும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் இது குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என நேற்றுக் கேள்வி எழுப்பிய

(6ஆம் பக்கம் பார்க்க)

உண்மையான விடுதலைப்

# "போராட்டத்தை அழிக்கவோ வாங்கவோ முடியாது!"

## இந்தியப்படை விலகலுடன் ஒரு தசாப்தம் முடிவடைகிறது

### -யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பானு-

(யாழ்ப்பாணம்)

உண்மையா விடுதலைக்கான போராட்டத்தை அக்கிரமங்களினாலும் கொடிய பயங்கரவாதத்தினாலும் அழிக்கமுடியாது என்பது மட்டுமல்ல விலை கொடுத்து வாங்கவும் முடியாது என இந்திய இராணுவம் யாழ் மாவட்டத்தில் இருந்து வெளியேறியதை ஊர்ஜிதம் செய்யச் சென்ற எமது செய்தியாளரிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. பானு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:

தமிழ்ப் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் முக்கியமானதொரு சகாப்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில்: இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற வாசலிற்கூடாக எங்களது மண்ணின் மீட்சிக்கான உன்னதமான விடுதலைப் போராட்டத்தை வஞ்சகமாக முற்றுமுழுதாக அழித்துவிட்டு த னுடைய காலூல ஆழப் பதிப்பதற்காக வந்து சேர்ந்த இந்தியப் படைகள் இன்று தமது தோல்வியின் சாயல்

கூலிப்பட்டாளங்களினதும் விபரிக்க முடியாத கொடுமைகளின் வேதனைகள் எமது மக்களிடம் காணப்பட்டாலும் ஆணவத்துடன் வந்த ஒரு பலம் வாய்ந்த ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து நின்று உலகமே வியந்து பாராட்டும் வண்ணம் வெளியேற்றிய பெருமையி இ று எ து மக்களும் மகிழ்ச்சியடைந்தபடி உள்ளனர்.

## விடு லைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுக்கூட்டம்

இ ்று வியாழன் மாலை 7-00 மணிக்கு, காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டமும், கலை, கலாசார பிரிவினர் வழங்கும் ''நடந்து வந்த பாதை'' வில்லிசையும், ''விடியலைத் தேடுவோம்'' இசை நாடகமும், இடம்பெறவுள்ளது.

சகல மக்களையும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 36 மணி நேரம் தமிழ் நிகழ்ச்சி

ரூபவாஹினியில் எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்திலிருந்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பகல் ஒரு மணி முதல் மூன்று மணி வரையும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவுள்ளன.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளை தரமுயர்த்துவது தொடர்பாக ஒரு மகாநாடும் நேற்று முன்தினம் தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்கா தலைமையில் நடைபெற்றது.

## மட்டுநகர் நகர மண்டபத்தில் அன்னை பூபதி உருவப்படம்

(மட்டக்களப்பு)

உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் உருவப்படம் ஒன்று நேற்று மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. அன்னையின் உருவப்படத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளர் திரு எஸ். கரிகாலன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அன்னை பூபதியின் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் நேற்று வாழைச்சேனையிலும் நடைபெற்றது. ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமும் நடைபெற்றது.

மட்டக்களப்பு முகத்துவாரம் மாமாங்கப் பிள்ளையார் கோவிலில் நேற்றும் தொடர்ந்து அன்னையர் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னை பூபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 15 தலைகள் மீட்பு

(மாத்தறை)

மாத்தறையில் உள்ள பாலம் ஒன்றுக்கு அருகில் பதினைந்து பேரின் துண்டிக்கப்பட்ட தலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

# தமிழ்ப் போராளிகளினால் தமிழகம் அமளிப்படுவதா?

## சட்டசபையில் கலைஞர் கருணாநிதி

(சென்னை)

தமிழ்ப் போராளிக்குழுக்கள் இடையே தமிழ்நாட்டில் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க தமிழக அரசு மிகவும் உறுதியாகவும் கவனமாகவும் இருப்பதாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சட்டப் பேரவையில் நேற்றுக் கூறினார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டிற்குள் நுழைந்துவிடாது தவிர்க்க நாம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறிய முதலமைச்சர், அவர்கள் வந்தால் தமிழ்நாட்டில் வன்முறைகள் ஏற்பட்டு சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் எனவும் கூறினார்.

ஒரிஸாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை தமிழகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வல்லாதிக்கத்தை

## 36 மணி நேரம் தமிழ் நிகழ்ச்சி

ரூபவாஹினியில் எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்திலிருந்து, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பகல் ஒரு மணி முதல் மூன்று மணி வரையும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவுள்ளன.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளை தரமுயர்த்துவது தொடர்பாக ஒரு மகாநாடும் நேற்று முன்தினம் தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்கா தலைமையில் நடைபெற்றது.

## வல்லாதிக்கத்தை முறியடித்து விட்டோம்

(யாழ்ப்பாணம்)

உண்மையான விடுதலைக்கான போராட்டத்தை அக்கிரமங்களினாலும் கொடிய பயங்கரவாதத்தினாலும் அழிக்கமுடியாது என்பது மட்டுமல்ல விலை கொடுத்து வாங்கவும் முடியாது என இந்திய இராணுவம் யாழ் மாவட்டத்தில் இருந்து வெளியேறியதை ஊர்ஜிதம் செய்யச் சென்ற எமது செய்தியாளரிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. பானு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:

தமிழ்ப் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் முக்கியமானதொரு சகாப்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில்: இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற வாசலிற்கூடாக எங்களது மண்ணின் மீட்சிக்கான உன்னதமான விடுதலைப் போராட்டத்தை வஞ்சகமாக முற்றுமுழுதாக அழித்துவிட்டு தனுடைய காலை ஆழப் பதிப்பதற்காக வந்து சேர்ந்த இந்தியப் படைகள் இன்று தமது தோல்வியின் சாயல் படிந்த முகத்துடன் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்தியப் படைகளினதும், அதனது கூலிப்பட்டாளங்களினதும் விபரிக்க முடியாத கொடுமைகளின் வேதனைகள் எமது மக்களிடம் காணப்பட்டாலும் ஆணவத்துடன் வந்த ஒரு பலம் வாய்ந்த ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து நின்று உலகமே வியந்து பாராட்டும் வண்ணம் வெளியேற்றிய பெருமையில் இன்று எமது மக்களும் மகிழ்ச்சியடைந்தபடி உள்ளனர்.

உலகில் எந்த ஒரு கொடிய மனிதர்களும் செய்ய முடியாத படுகொலைகளையும், வன்முறைகளையும் எங்கள் மண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியப்படை விலகல் பற்றி விடுதலைப் புலிகள் செயலகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

முப்பத்தி இரண்டு மாதங்களாக இந்திய வல்லாதிக்கப் புயல் வீசியது. காந்தியம் குண்டுமழை பொழிந்தது. உலகின் நான்காவது பெரிய இராணுவ தமிழீழ மண்ணில் கொலை வெறி பிடித்தலைந்தது என விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் தமிழ் தேசிய விடுதலைப் போரை அழிக்க விடுதலைப்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சட்டசபையில் கலைஞர் கருணாநிதி

(சென்னை)

தமிழ்ப் போராளிக்குழுக்கள் இடையே தமிழ்நாட்டில் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க்க தமிழக அரசு மிகவும் உறுதியாகவும் கவனமாகவும் இருப்பதாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சட்டப் பேரவையில் நேற்றுக் கூறினார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டிற்குள் நுழைந்துவிடாது தவிர்க்க நாம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறிய முதலமைச்சர், அவர்கள் வந்தால் தமிழ்நாட்டில் வன்முறைகள் ஏற்பட்டு சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் எனவும் கூறினார்.

ஒரிஸாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை தமிழகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹமீத் பிரதமராவார்?



(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதம மந்திரியாக நான்கு அமைச்சர்களின் பெயர்கள் அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது. இதில் சிரேஷ்ட அமைச்சரான, உயர்கல்வி விஞ்ஞான அமைச்சரும், இனப்பிரச்சினையில் சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீதின் பெயரே முதலிடத்தைப் பெறுவதாகத் தெரிகிறது. போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ். பாதுகாப்புத் துறை இராஜாங்க அமைச்சரும், வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோரின் பெயர்களும் பிரதம மந்திரிப் பதவிக்கு அடிபடுகின்றனவென்றும் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

இ போதைய பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கா ஒரு வருட காலத்துக்கு மட்டுமே பதவியிலிருப்பார் என்று அவர் நியமிக்கப்பட்டபோதே ஜனாதிபதி அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையில் மாற்றமெதுவும் ஏற்படமாட்டாதென்றும், புதிதாக நால்வர் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடுமென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

### க. பொ. த. உயர்தர பரீட்சை

## விடைத்தாள் மீளாய்வு இன்று முதல் விண்ணப்பிக்குக

(கொழும்பு)

கடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மறு பரிசோதனை செய்வதற்கான விண்ணப்பங்களை இன்று 22 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரை பரீட்சார்த்திகள் அனுப்பி வைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு பாடத்தின் விடைத்தாள்களை மறு பரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருடர்களுக்கு புலிகள் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், களவாடுதல் என்பனவற்றில் ஈடுபடுபவர்களை விடுதலைப் புலிகள் கடுமையாக எச்சரித்துள்ளனர். தந்திக் கம்பிகளை அறுத்தல், தண்டவாளத் தகடுகளைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முன்னணி கூட்டம் இன்று வவுனியாவில் நிகழும்

(வவுனியா)

இன்று வியாழக்கிழமை வவுனியா தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் விடுதலைப் புலிகளின மக்கள் முன்னணி பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தையா) வும், செயலாளர் திரு. யோகியும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இத்துடன் வவுனியா மாவட்ட மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. தினேஷ் உட்பட பலரும் உரையாற்ற உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதன் பின், திரு. மாத்தையாவும், யோகியும் பொதுமக்கள் முன் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டம் இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## சுப்பிரமணியம் பூங்கா சர்வதேசதரத்திற்கு மாறும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் கீழ உள்ள சுப்பிரமணியம் பூங்காவை சர்வதேச தரத்திற்கு ஒப்பான ஒரு பூங்காவாக மாற்ற தாம் திட்டமிட்டுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவிக்கிறார்.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்த வடிவமைப்பாளர்களிடம் இப்பூங்காவைப் புருனத்தாரணம் செய்வது பற்றி ஆலோசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இப்பூங்கா பற்றி அவர் தெரிவிக்கையில் வருங்காலத்தில் அமைக்கத்திட்டமிட்டிருக்கும் இப்பூங்கா செயற்கை நீர்வீழ்ச்சி ஒன்றை கொண்டமைந்ததாக இருக்கும் என்றும் நவீன காலத்துக்கேற்ற வகையில் இதனை அமைக்கப்போவதாகவும் அவர் கூறினார். (லோ)

## "பெருமாளை நாம் கொண்டு செல்லவில்லை" - கல்கத்

### 1115 இந்திய வீரர் கொல்லப்பட்டனராம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளை நாங்கள் இங்கிருந்து கொண்டு செல்லவில்லை, இது எங்களுக்கு அப்பாற்பட்ட விஷயம் என்று இந்திய அமைதிப்படையின் தலைமைத் தளபதி லெப். ஜெனரல் கல்கத் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

நீங்கள்தான் வரதராஜப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா மாவட்டத்தில்

## ஆசிரிய பயிலுநர்களுக்கு அடுத்த மாதம் பயிற்சி வகுப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர் பயிலுனர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் நடைபெற இருக்கும் இந்த பயிற்சி வகுப்புகள் ஒன்பது நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

வவுனியா நகரில் உள்ள நான்கு பிரதான பாடசாலைகளில் இவ்வகுப்புகள் நடைபெற உள்ளன.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், மகளிர் மகா வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாசாலை, பரக்குன் சிங்கள மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலேயே மேற்படி வகுப்புகள் நடைபெறும் என்று வவுனியா கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று கல்விக்கந்தோர் ஸ்தம்பிதம்

### ஊழியர் ஒரு நாள் வேலை நிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஐம்பது சதவீத ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படாததைத் தொடர்ந்து தாங்கள் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று மட்டக்களப்புக் கல்வித் திணைக்கள ஊழியர்கள் வேலைக்குச் செல்லாமல் அலுவலகத்துக்கு வெளியே நிற்கக்காணப்பட்டனர்.

இந்த ஊழியர் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டதால் ஆசிரியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை மோசடிகளைத் தடுக்கப் புலிகள் உதவி

(மட்டக்களப்பு)

கடந்த வருடங்களில் நடைபெற்ற க.பொ.த.சா. பரீட்சையில் குதிரையோட்டம் போன்ற மோசடிகள் இடம் பெற்றதானாலும் இம்முறை அவ்வாறு நடைபெறுவது தடுக்கப்பட வேண்டுமென்றும் மட்டக்களப்பிலுள்ள விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

# நாம் தமிழர் தமிழீழத் தாயின்பிள்ளைகள் நாம் எல்லோரும் சகோதரர்கள்

(சாவகச்சேரி)

சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட, சகோதரத்துவம், பண்பு, ஒழுக்கம் நிறைந்த ஒரு சமுதயமாக எமது தமிழீழ தமிழ் சமுதாயம் மலரவேண்டும் நாம் தமிழர் தமிழீழத்தாயின் பிள்ளைகள் நாமெல்லோரும் சகோதரர்கள். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் திரு. தினேஸ் மேற்கண்டவாறு, தென்மராட்சிப் பகுதி விழிப்புக்குழு உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

தென்மராட்சி பகுதி விழிப்பு குழு உறுப்பினர்களை அழைத்து, சாவகச்சேரி அலுவலகத்தில் கலந்துரையாடல் நடத்திய அமைப்பாளர் திரு. தினேஸ் மேலும் கூறியதாவது

சாதிப்பிரச்சினை குறிப்பாக சாவகச்சேரிப் பகுதியில் இருப்பதாகத் தெரிகிறது. இது ஒழிக்கப்பட வேண்டும் சாதிப் பாகுபாடு வேரூன்றி இருக்கும் ஒரு இனத்திலே ஒருபோதும் ஒற்றுமை வளர முடியாது. சமூக ஒத்துழைப்பும் இருக்க முடியாதது மட்டுமல்ல அந்த இனம் அரசியல் துறையிலோ பொருளாதாரத் துறையிலோ அன்றி வேறெந்தத் துறையிலுமோ முன்னேற முடியாது.

ஒரு சமூகத்தில் வாழும் சகல மக்களுக்கும் எல்லா உரிமைகளும் எதுவிதபாகுபாடுமின்றி வழங்கப்படவேண்டும். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவமாகும். இதை விழிப்பு குழுவினரும் தமது நடைமுறையில் சொண்டுவர வேண்டும் என்றார்.

இதில் கலந்துகொண்ட அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசும்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசின் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவுடன் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தைகள் தற்காலிகமானவை. இது தோல்வி காணும் பட்சத்தில் நாம் பிரியவேண்டிய நிலைதான் என்பதை நாம் தெட்டத் தெளிவாக விளக்கியுள்ளோம்.

மேலும் விழிப்புக் குழுவினர் நெருக்கமாக மக்கள் மத்தியில் புளங்கவேண்டும். மக்கள் மத்தியில் ஒரு புதுவிதமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மக்கள் பலமே எங்கள் பலம் என்றும் அவர் கூறினார். (35)

வரிவிளம்பரம்

விரும்பசேவைக்கு

B-M.C. லொறி - 24/6431 24/3251, கார், மொறிஸ், ஒக்ஸ்போர்ட். S. மகேந்திரா, 34, ஆடியபாதம்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்., 53, K.K.S. றோட், யயழ்ப்பாணம். B-136

எம்மிடம் சகலவிதமான, பெயின்ற் வகைகளும் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபன பொருட்களும், மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வினாயகர் ஹாட்வெயர் 185, கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். B/338

எம்மிடம் கினிசப்பு, மாம் பலகை, ரீப்பை வகைகளும் விற்பனைக்குண்டு. நீங்கள் நாடவேண்டிய முகவரி:- கிமலயா மரக்காலை 208, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (B-348)

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். எஸ்.சுப்பிரமணியம் அன் கொம்பனி 53, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (B-140)

கிருமிநாசினிகள், காய்கறி விதைகள், மண்வெட்டி பிடிகள் முதலியவற்றுக்கு தலைசிறந்த இடம் அக்றோதவாஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (B-333)

சமூகக்கல்வி

ஆண்டு 6 சமூகக்கல்வி வரலாறு செயல்நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைசளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை யாழ்ப்பாணம். B/313

நீரிழிவு

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டாமா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777, K. K. S. Road, Jaffna. (B/67)

## திருத்தவேலை காரணமாக

# குடிநீரின்றி யாழ். நகர மக்கள் ஒருவார காலம் பெரும் அவதி!

யாழ். மாநகரசபைப்பகுதியில் குழாய்களில் திருத்த வேலை காரணமாக கடந்த சில நாட்களாகக் குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் பெரிதும் அவதியுற்றனர்.

முன்னர் லொறிகள், பௌசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டதைப் போல, இப்படியான காலங்களில் தமக்கு குடிநீர் வழங்க மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் பொதுமக்கள் ஈழநாதம் நிருபரிடம் கவலை தெரிவித்தனர்.

சில வீடுகளில் கிணறுகள் உள்ளன. கிணறுகள் இல்லாத வீடுகளில் குடிப்பது மட்டுமன்றி, ஏனைய தேவைகளுக்கும் குழாய் நீரையே நம்பியுள்ளனர்.

இதே சமயம் குழாய்களில் துருப்பிடித்த நீர் வருவதையும் காணக்கூடியதாசவிருந்தது. நல்ல தண்ணீர் வரும் வரும் என்று மக்கள் ஆங்காங்கே காவல் இருந்தனர்.

# சாய்புச் ப்சட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தால் அண்மையில் கொண்டுவரப்பட்ட சாய்ப்புச் சட்டம் யாழ் மாவட்டத்தில் தற்போதைக் கமல்ப த்தப்பட மாட்டாது. இச்சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக யாழ்.மாவட்ட உதவித்தொழிலாணையாளர் தெரிவிக்கிறார்.

இச்சாய்புச்ப்சட்டக்தில் காலை பத்து மணிக்குத் திறக்கப்படும் வியாபார ஸ்காபனங்கள் இரவு பத்து மணிவரை இயங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறான சட்டம் எமது பிரதேசத்தில் தற்போதைக்குச் செயற்படுத்துவது கடினம். ஆகவே மேல் மட்டத்துடன் இதனை வேறுவிதமாக எமது பிரதேசத்தில் மட்டும் மாற்றி அமைப்பது சம்பந்தமாக விரைவில் ஆலோசிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ் நகரில் இன்றைய சினிமா

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்தகாட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி

# இந்தியப்படையால் எம்மக்களுக்கு பேரிழப்பு வரும்என முன்னரே கூறியவர்

## வவுனியாவில் அன்னை பூபதி கூட்டத்தில் பேச்சு

(வவுனியா)

அந்நிய ஆதிக்கத்தை எமது மண்ணிலிருந்து அகற்றுவதற்காக அன்னை பூபதி அவர்கள் தன் உயிரை அர்ப்பணித்துள்ளார் இன்று பெண் சமுதாயத்தின் விடிவெள்ளியாகத் திகழ்கிறார்.

இவ்வாறு வவுனியா மன்னார் வீதி கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவுதின அஞ்சலி கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போது, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திரு. தினேஷ் .குறிப்பிட்டார்

மக்களின் நிம்மதிக்காகவும் பிரகாசமான வாழ்விற்காகவும் இன்று அன்னையின் தியாகம் பயன்படுகிறது.

அன்னையின் தோற்றம் வரலாற்றில் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அரசின் போலிமுகத்தை கிழித்தெறிந்த வீரத்தாயை இன்று அனைவரும் ஞாபகம் கொள்வோம். இவரின் ஆத்மா சாந்திக்காக அஞ்சலி செய்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. ச. சிவசுப்ரமணியம் தமதுரையின் போது, விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியாக புலிகளின் அமைப்புக்கு அரசியல் அங்கீகாரம் கிடைத்தபின்பும் எமது பகுதியில் ஓர் அச்சநிலை காணப்படுகிறது. இந்த நிலைமையை மக்களாகிய நாம் மாற்ற வேண்டும்.

அன்னை பூபதி அவர்கள் ஒரு வேதனையான காலகட்டத்தில் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். அமைதி வேண்டும். அல்லாவிட்டால் இந்தியப் படையினரால் எமது மக்களுக்கு பேரிழப்பு நிகழும் என்பதை இருவருடங்களுக்கு முன்பே சிந்தித்து இரு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்.

நாமும் எமது சந்ததியினரும் சுதந்திரமாகவும், சுபீட்சமகாவும் வாழ்வதற்சாக அன்னை தன் உயிரைத் தியாகம் செய்துள்ளார்.

ஆர். செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் இறுதியில் அன்னை பூபதிபற்றிய வாழ்த்துப்பா பாடப்பட்டது. (தி)

ஈழநாதம் வளர்க !

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# ஆங்கில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

(தீவுப்பகுதி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஆங்கில மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடுகள் நிலவுகின்றது. இப்பகுதிகளிலுள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களுக்குச் சென்று, அத்தியாவசிய மருந்து வகைகள் கேட்டால் அவை இல்லையெனக் கைவிரிக்கப்பட்டு வருகின்றது. முக்கியமான பல ஆங்கில மருந்து வகைகள் தற்போது கொழும்பிலே தட்டுப்பாடாக இருக்கின்றது. கடந்த சில மாதங்களாக இம்மருந்து வகைகள் தட்டுப்பாட்டின் காரணமாக நோயாளர்கள் மிகுந்த கஷ்டமடைவதுடன், வைத்தியர்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். முன்பெல்லாம் இலங்கைக்குத் தேவையான முக்கால் வாசி மருந்துகள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது பல மருந்து வகைகள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்தே தருவிக்கப்பட்டு வருகிறது. இவைகளின் விலையும் தற்போது அதிகரித்துள்ளது. சாதாரண விற்றமின் 'சீ' யிலிருந்து பல உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (15)

# அளவைகள் நிறுவைகளுக்கு முத்திரையிடவேண்டும்

(கொழும்புத்துறை)

இம் மாதம் 21-ம் திகதி முதல் 30-ம் திகதிவரை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வியாபாரிகளினதும் அளவைகள், நிறுவைகள் முத்திரையிடப்பட்டுவருகின்றன என்று யாழ். மாவட்ட நிறுவைகள் அளவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

சங்கானை உதவி அரசாங்க

முத்திரையிடும் வேலை நடைபெறுமென்றும் வியாபாரிகள் தம்மிடமுள்ள தராசு, படி, லீற்றர்; மீற்றர், அளவைகள், மேடைத்தராசு, தூக்குத் தராசு என்பனவற்றுடன் சமுகமளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் சகல வியாபாரிகளும், வர்த்தக நிறுவனங்களும், தினமும் தமது அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு யாழ். செயலகத்

## சமூகக்கல்வி

ஆண்டு 6 சமூகக்கல்வி வரலாறு செயல்நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை யாழ்ப்பாணம். B/313

## நீரிழிவு

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டா மா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777, K. K. S. Road, Jaffna. (B/67)

## சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

## வாடகைக்கு

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B- 335)

## தேவை

சமையல்காரர், சமையல் வேலை பழகுபவர்கள் உணவு பரிமாறுபவர் தேவை.

யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

நேரில் வரவும் - (காலை 9.00 - 11.00 வரை) அல்லது விண்ணப்பிக்கவும். B/318

யத்தின விடிவெள்ளியாகத் திகழ்கிறார்.

இவ்வாறு வவுனியா மன்னார் வீதி கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவுதின அஞ்சலி கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திரு. தினேஷ் குறிப்பிட்டார்.

மக்களின் நிம்மதிக்காகவும் பிரகாசமான வாழ்விற்காகவும் இன்று அன்னையின் வோம். இவரின் ஆத்மா சாந்திக்காக அஞ்சலி செய்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

திரு. ச. சிவசுப்ரமணியம் தமதுரையின் போது, விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியாக புலிகளின் அமைப்புக்கு அரசியல் அங்கீகாரம் கிடைத்தபின்பும் எமது பகுதியில் ஓர் அச்சநிலை காணப்படுகிறது. இந்த நிலைமையை மக்களாகிய நாம் மாற்ற வேண்டும்.


ஈழநாதம் வளர்க !

தரமான சுவையான

- ஐஸ்கிறீம் வகைகள்
- ஐஸ் சொக்ஸ்
- ஐஸ்பழம்
- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- ஜோக்கட் கப் ஐஸ்கிறீம்

நாடவேண்டிய இடம்

குணம் கிறீம் ஹவுஸ்

மயிலிட்டி.

கிளை: துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

B/342


படையினரால் எமது மக்களுக்கு பேரிழப்பு நிகழும் என்பதை இருவருடங்களுக்கு முன்பே சிந்தித்து இரு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்.

நாமும் எமது சந்ததியினரும் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்காக அன்னை தன் உயிரைத் தியாகம் செய்துள்ளார்.

ஆர். செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் இறுதியில் அன்னை பூபதிபற்றிய வாழ்த்துப்பா பாடப்பட்டது. (தி)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


ளாக இம்மருந்து வகைகள் தட்டுப்பாட்டின் காரணமாக நோயாளர்கள் மிகுந்த கஷ்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (15)

# அளவைகள் நிறுவைகளுக்கு முத்திரையிடவேண்டும்

(கொழும்புத்துறை)

இம் மாதம் 21-ம் திகதி முதல் 30-ம் திகதிவரை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வியாபாரிகளினதும் அளவைகள், நிறுவைகள் முத்திரையிடப்பட்டுவருகின்றன என்று யாழ். மாவட்ட நிறுவைகள் அளவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இம் முத்திரையிடும் வேலை நடைபெறுமென்றும் வியாபாரிகள் தம்மிடமுள்ள தராசு, படி, லீற்றர், மீற்றர், அளவைகள், மேடைத்தராசு, தூக்குத் தராசு என்பனவற்றுடன் சமுகமளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் சகல வியாபாரிகளும், வர்த்தக நிறுவனங்களும், தினமும் தமது அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு யாழ். செயலகத்திற்கு முன்பாக உள்ள அளவைகள், நிறுவைகள் திணைக்களத்தில் முத்திரையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)


125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்

வெலிங்டன் (யாழ்)

தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு

வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா

அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி

நெஞ்சத்தை கிள்ளாதே



## அறிவித்தல்

கர்நாடக சங்கீத பிரியர்கட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

சுன்னாகம், சூராவத்தை ராஜராஜேஸ்வரி மண்டபத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் (திங்கள், சனிக்கிழமை) இசைதாளதிலகம், உ. ராதாகிருஷ்ணன் அவர்களால் வயலின் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

ஆர்வமுடன் வயலின் பழக விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

திரு, சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம்,
சூராவத்தை,
சுன்னாகம்.

இங்ஙனம், B/346
சூராவத்தை முத்துமாரியம்மன் பரிபாலனசபை


வடக்கு கிழக்குப் பகுதிகளில்

# அரசாங்க அலுவலகங்களில் தமிழில்கருமமாற்றலில்லை

(கொழும்பு)

16 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டமூலம் தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக அரசு பிரகடனம் செய்த போதிலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் தமிழ்புறக்கணிக்கப்பட்டே வருகிறது.

அரசு இது தொடர்பாக 25/89, 5/88, 12/89, 25/89 ஆகியஇலக்கங்களுடைய சுற்றுநிருபங்களையும்சகல திணைக்களங்களுக்கும் அனுப்பியுள்ளது.

ஆனால் இங்குள்ள சில அதிகாரிகள் தமிழில் கருமமாற்ற முடியாது நொண்டிச் சாட்டுச் சொல்லிவருகின்றனர். பொது மக்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு ஆங்கிலத்திலேயே பதில் அளிக்கப்பட்டுவருகிறது

பொது நிர்வாக மாகாண சபையின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் யூ. பி. விஜயக்கோன் அரசாங்கமொழி ஆணைக்குழுவையும் இதற்காக நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழு எங்கிலும் தமிழ் மொழியில் கருமமாற்ற ஆவன செய்ய வேண்டும் என பொது மக்கள் கேட்கின்றனர்.


ஈழநாதம் பத்திரிகைக்கு எமது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகுக!

AGROMARINE LTD.

LANKA MARINE EXPO (PVT) LTD.,

35, Bankshall Street, JAFFNA.

(B.344)

# தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கையில் அடிப்படை மாறுதல்

## பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலர் கருத்து

(கேப் ரவுண்)

தென் ஆபிரிக்காவின் வெள்ளையர் ஆட்சியில் இன ஒதுக்கல் கொள்கையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்று இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேட் கேப் ரவுணில் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காஜனாதிபதியாக எவ். டபிளியூ டீ. கிளார்க் பதவி ஏற்று ஒரு வருடத்துக்குப் பிறகு, டக்ளஸ் ஹேட் உயர் மட்டப் பேச்சு வார்த்தைகளுக்காக சென்ற திங்களன்று தென் ஆபிரிக்காவுக்கான தனது உத்தியோக பூர்வ முதல் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

நமீபியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக நபீபியா செல்லும் வழியில், டக்ளஸ் ஹேட் 24 மணித்திய லயம் கேப் ரவுணில் தரித்து நின்று, தென் ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க்கிடனும், உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்திய பின், தென் ஆபிரிக்காவில் இரு கறுப்பின மக்களின் நகரங்களைப் பார்வையிட்டார்.

தென் ஆபிரிக்காவில், ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா வைத்தான் சந்திப்பதாகவில்லை என்று இங்கிலாந்தில் வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேட் தெரிவித்தார். ஆனால் ஹேட், நெல்சன் மண்டேலாவை நபீபியாவில் சந்திக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆபிரிக்க ஜனாதிபதி டீ. கிளார்க்கைச் சந்தித்த பிறகு பத்திரிகையாளர் மத்தியில் டக்ளஸ் ஹேட் பேசுகையில், ஆபிரிக்காவின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அப்பிரதேசத்தின் பொருளாதார, ஜனநாயக வளர்ச்சிக்கு தென் ஆபிரிக்கா தனது சக்தியைப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

## மேல் முறையீட்டாளர் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

மேன்முறையீடு செய்வது சம்பந்தமாக முதல் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டு பின்பு இரண்டாம் பட்டியலில் நீக்கப்பட்ட ஆசிரிய விண்ணப்பதாரிகள் மட்டும் தம்மை வந்து சந்திக்குமாறு யாழ்ப்பாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டிக் கொள்கிறார்.

ஒரு முறையும் தெரிவு செய்யப்படாதோருக்கான மேன்முறையீடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடதக்கதே.

(லோ)

# ஆப்கான் அரசியல் சாசனத்தில் மாற்றம்

(வாஷிங்டன்:

அமெரிக்க. சோவியத் அதி அதிகாரிகள் இவ்வார இறுதியில் ஹெல்சிங்கியில் சந்திக்கும்போது ஆப்கானிஸ்தான் பிரச்சினைபற்றிய பேச்சு இடம்பெறும் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க ராஜாங்க உதவிச் செயலாளர் யோண் கெலிக்கும், சோவியத் உயர் அதிகாரிகளுக்கு மிடையில் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தை தொடர்பாக நிழ்ச்சி நிரல் எதுவும் இல்லை என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக விவாதிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டைக்கூடடவுள்ளார். இவ் விஷயம் பேச்சு வார்த்தைகளில் இடம்பெற கூடுமாம்.

வழக்கமாக நடைபெறும் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காகவே யோண் செலி ஹெல்சிங்கி போகவுள்ளார் என்று பிரதி ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டைக் கூட்டுவது, 25 வருடங்களில் இது இரண்டாவது முறையாகும். நாட்டின் அரசியல் ஸ்தாபனத்தில் மாற்றங்கள் செய்வது தொடர்பாக மகாநாட்டில் ஆலோசிக்கப்பட இருப்பதாக ஆப்கானிஸ்தான் பாக்தார் செய்தி ஸ்தாபனம் ஞாயிறன்று அறிவித்தது.

நஜிபுல்லாவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியின் பிறகே. அவர் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டைக் கூட்டுவதற்குத் தீர்மானித்துள்ளாராம்.

எமது ஏகபோக அதிகாரத்தை நாம் கைவிடப் போவதாக இரண்டு வருடங்களுக்கு முன்னதாக அறிவித்திருந்தோம், ஆனால் நடைமுறையிலே தாம் சிறிதளவுதான் மாற்றமடைந்துள்ளோம். இவ்வாறு ஞாயிறன்று கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிடடிக் கூட்டத்தில் நஜிபுல்லா கூறியதாக பாக்தார் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

அதேவேளை வல்லரசுகள் ஆப்கான் பிரச்சினையில் தலையிடாமல் தங்கள் காரியங்களைக் கவனிப்பது விரும்பத்தக்கது என்று முன்பே நஜிபுல்லா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒரிஸ்ஸா தமிழ் அகதிகளால் சொந்த மக்களுக்குத் தொல்லை

## சட்டசபையில் அமளி துமளி!

(புவனேஸ்வர்)

இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் வந்திறங்கியது சம்பந்தமாக ஒரிஸா மாநிலத்தின் சட்டசபையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்த விவாதத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் சம்பந்தமான விவாதமொன்றை ஜனதாக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் முன்வைத்தார். இவரது தீர்மானம் சபைத் தலைவரால் நிராகரிக்ப்பட்டது. இதனையடுத்து அவையில் பெரும் சந்தடி ஏற்பட்டது. அத்துடன் ஒரிஸா சட்ட மன்ற உறுப்பினர் சிலரும், உள்துறைத் தலைவர்களும், முன்னாள் அமைச்சர் ஒருவரும் இவ் அகதிகளை அகற்றும்படி மத்திய அரசைக் கோரி வருகின்றனர்.

இதற்கிடையில் ஒரிஸா அகதி முகாமில் இருந்து தப்பிச் சென்றவர்களில் ஈ. என். டி. எல். எவ். தலைவர்கள் மூன்று பேர் உட்பட ஒன்பது பேர் தப்பிச் சென்றனர்.

இவர்களில் ஏழு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, மீண்டும் ஒரிஸாவிலுள்ள கோராப்பூர் அகதி முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அங்கிருந்து வெளி மாநிலத்துக்குச் செல்லும் அனைத்து வாகனங்களும் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகின்றன. இதனால் வழமையான நிலைமை பாதிக்கப்படுவதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நமீபிய சுதந்திர கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்கிறேன்

**- வி. பி. சிங்**

(புதுடில்லி)

நமீபிய நாட்டுச் சுதந்திரத்திற்கும் தென்னாபிரிக்கா அரசின் இன விரிக்கொள்கைகளைத் தகர்ப்பதற்கும் பாரதம் எப்பொழுதும் ஆதரவு அளித்து வருகிறது என்று பாரதப் பிரதமர் வி. பி. சிங் கூறினார்.

நமீபியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஜிஞ்சுவாஜ் நகரத்திற்குப் புறப்படுவதற்கு முன் புதுடில்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

திரு. வி. பி. சிங் பிரதமர் பதவியை ஏற்றபின் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அவரை வழி அனுப்புவதற்காக துணைப் பிரதமர் தேவிலால், வெளியுறவுத் துறை அமைச்சர் ஐ கே. குஜ்ரால் அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். தனது வெளிநாட்டு முதலாவது பிரயாணம் நமீபியாவின் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக அமைந்திருப்பதையிட்டு தான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

# பஞ்சாப் குண்டு வெடிப்பில் எட்டு பேர் பலி

(சண்டிகார்)

இந்தியாவின் பாநிலமான பஞ்சாப்பில் நடந்த வன்முறையில் மேலும் ஆறு பேர் மரணமானார்கள். பஞ்சாப் மாநிலத்திற்கும் ஹரியானா மாநிலத்திற்கும் கூட்டாக இருந்துவரும் தலைநகர் சண்டிகாரில் மககள் கூடி நிற்கும் சந்தடி மிக்க பகுதியி குண்டு வெடித்ததினால் இவ் வன்முறை இடம்பெற்றது. இதில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் மரணமானார்கள். இக் குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்ததாக கூறப்படும் சீக்கியத் தீவிரவாதிகள் இருவரும் இறந்தனர்.

அதேவேளை பஞ்சாப்பில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்கெட்டு இருப்பதாக பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. காஷ்மீரில் ஏற்படும் பிரச்சினை பற்றி கவனிப்பதற்கென அமைச்சர் நியமித்தது போல பஞ்சாப்புக்கும் அமைச்சர் அமைக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

# பொருளாதார ரீதியாக மொஸ்கோ பாதிப்படையாது

**--- லித்வேனியத் தலைவர்**

(மொஸ்கோ)

மொஸ்கோவின் பொருளாதார நலனுக்கு மிரட்டல் ஆபத்து ஏதும் லித்வேனியாவினால் ஏற்பட்டு விடாது என்றும், அவை ஏற்பட்டு இருப்பதாக மொஸ்கோ கருதினால் அதற்கு தமது மறுதலிப்பினையும், லித்வேனிய தலைவர் லயன்ஸ் பேகட் தெரிவித்துள்ளார். திங்கள் காலை பாராளுமன்றத்தில் பேசும் போது இவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதற்கு முன்னதாக சோவியத் பிரதம அமைச்சர் மிக்கலாய் றிக்சாவ்கிய ஆலைத் தொழில், மற்றும் கேந்திர முக்கியத்துவம் பொருந்திய நிலையங்களை எல்லாம் மொஸ்கோவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக உறுதிப்படுத்திய செய்திக்கு பதிலளிக்கு முகமாக இவ்வாறு இவர் குறிப்பிட்டார்.

மொஸ்கோவின் கடுமையான போக்கிற்கு லித்வேனியா வளைந்து கொடுக்கக் கூடாது என்பது பெரும்பாலான லித்வேனியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணமாகும். அத்துடன் மொஸ

## ஏப்ரல் 13 தேசிய புது வருட தினமாகப் பிரகடனம்

(புத்தளம்)

சிங்கள தமிழ் புதுவருதினமான ஏப்ரல் 13 ஆம் திதியை தேசிய புது வருட தினமாகஜனாதிபதி பிரேமதாசா ஆனமடுவில் இடம் பெற்ற வைபவமொன்றில் பிரகடனப் படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அவ் வைபவத்தில் பேசும் போது இன மத வேறுபாடுகளை மறந்து சகலரும் ஒன்றிணைந்து ஏப்ரலில் இத்தினத்தைக் கொண்டாட முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

# நடேசய்யர் நூற்றாண்டு விழாவை நாடளாவிய ரீதியில் நடாத்த முடிவு

குருநகர் மீனவர்களுக்கு

# ஜனசக்தி திட்டத்தின் கீழ் மீன்பிடி உபகரணம் வழங்கல்

(சண்டிகார்)

இந்தியாவின் பாநிலமான பஞ்சாப்பில் நடந்த வன்முறையில் மேலும் ஆறு பேர் மரணமானார்கள். பஞ்சாப் மாநிலத்திற்கும் ஹரியானா மாநிலத்திற்கும் கூட்டாக இருந்துவரும் தலைநகர் சண்டிகாரில் மக்கள் கூடி நிற்கும் சந்தடி மிக்க பகுதியி குண்டு வெடித்ததினால் இவ் வன்முறை இடம்பெற்றது. இதில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் மரணமானார்கள். இக்குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்ததாக கூறப்படும் சீக்கியத் தீவிரவாதிகள் இருவரும் இறந்தனர்.

அதேவேளை பஞ்சாப்பில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்கெட்டு இருப்பதாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. காஷ்மீரில் ஏற்படும் பிரச்சினை பற்றி கவனிப்பதற்கென அமைச்சர் நியமித்தது போல பஞ்சாப்புக்கும் அமைச்சர் அமைக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

வதற்காக துணைப் பிரதமர் தேவிலால், வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ கே. குஜ்ரால் அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். தனது வெளிநாட்டு முதலாவது பிரயாணம் நமீபியாவின் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்காக அமைந்திருப்பதையிட்டு தான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

# பொருளாதார ரீதியாக மொஸ்கோ பாதிப்படையாது

## --- லித்வேனியத் தலைவர்

(மொஸ்கோ)

மொஸ்கோவின் பொருளாதார நலனுக்கு மிரட்டல் ஆபத்து ஏதும் லித்வேனியாவினால் ஏற்பட்டு விடாது என்றும், அவை ஏற்பட்டு இருப்பதாக மொஸ்கோ கருதினால் அதற்கு தமது மறுதலிப்பினையும், லித்வேனிய தலைவர் லயன்ஸ் பேகட் தெரிவித்துள்ளார். திங்கள் காலை பாராளுமன்றத்தில் பேசும் போது இவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதற்கு முன்னதாக சோவியத் பிரதம அமைச்சர் மிக்கலாய் றிக்சாவ் லித்வேனியாவில் உள்ள முக்கிய ஆலைத் தொழில், மற்றும் கேந்திர முக்கியத்துவம் பொருந்திய நிலையங்களை எல்லாம் மொஸ்கோவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக உறுதிப்படுத்திய செய்திக்கு பதிலளிக்கு முகமாக இவ்வாறு இவர் குறிப்பிட்டார்.

மொஸ்கோவின் கடுமையான போக்கிற்கு லித்வேனியா வளைந்து கொடுக்கக் கூடாது என்பது பெரும்பாலான லித்வேனியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணமாகும். அத்துடன் மொஸ்கோவிடம் இறைமை அதிகாரம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

அதேவேளை பொருளாதாரரீதியாக அதாவது வெளிநாட்டு உற்பத்தி நிலையங்களையும் வடிகால் நிலையங்களையும் லித்வேனியா சுரண்டாது என்றும் லித்வேனியத் தலைவர் உறுதியாக குறிப்பிட்டார்.

(புத்தளம்)

சிங்கள தமிழ் புதுவருட தினமான ஏப்ரல் 13 ஆம் திதியை தேசிய புது வருட தினமாகஜனாதிபதி பிரேமதாசா ஆனமடுவில் இடம் பெற்ற வைபவமொன்றில் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அவ் வைபவத்தில் பேசும் போது இன மத வேறுபாடுகளை மறந்து சகலரும் ஒன்றிணைந்து ஏப்ரலில் இத்தினத்தைக் கொண்டாட முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

களுக்கு முன்னதாக அறிவித்திருந்தோம், ஆனால் நடைமுறையிலே தாம் சிறிதளவு தான் மாற்றமடைந்துள்ளோம். இவ்வாறு ஞாயிறன்று கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக் கூட்டத்தில் நஜிபுல்லா கூறியதாக பாக்தார் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

அதேவேளை வல்லரசுகள் ஆப்கான் பிரச்னையில் தலையிடாமல் தங்கள் காரியங்களைக் கவனிப்பது விரும்பத்தக்கது என்று முன்பே நஜிபுல்லா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடேசய்யர் நூற்றாண்டு விழாவை நாடளாவிய ரீதியில் நடாத்த முடிவு

(கொழும்பு)

இலங்கையின் முதல் தமிழ் தினசரியின் ஆசிரியரும், மலையகத்தின் முதல் தொழிற்சங்க ஸ்தாபகரும், மலையக ஆக்க இலக்கிய முன்னோடியுமான தேசபக்தன் கோ நடேசய்யரின் நூற்றாண்டை அடுத்த ஆண்டு நாடளாவிய ரீதியில் நடத்துவதென மலையக கலை இலக்கியப் பேரவையால் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானம் பேரவைத் தலைவர் திரு. சாரல் நாடன் தலைமையில் விஷேட செயற்குழு கூட்டம் கொழும்பில் நடைபெற்ற பொழுது தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அடுத்த ஆண்டு கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, ஹட்டன், நூறளை, மட்டக்களப்பு, திருக்கோணமலை, சிலாபம் ஆகிய எட்டு இடங்களில் கோ. நடேசய்யர் பற்றிய கருத்தரங்கு, கண்காட்சி ஆகியவற்றை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் கோ. நடேசய்யர் பற்றிய ஆய்வுரைகளைக் கொண்ட சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவது என்றும் தேசபக்தன் கோ. நடேசய்யர் பற்றிய வரலாற்று நூலை எழுதிய சாரல்நாடனின் ''பத்திரிகையாளர் கோ. நடேசய்யர்'' என்ற நூலையும் வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட இறுதியில் கவிஞர் சு. முரளிதரன் நன்றி கூறினார். (27)

# புகையிரதப் பயணிகளால் பாதசாரிகளுக்கு தொல்லை

(கோண்டாவில்)

ரயிலில் பயணம் செய்பவர்கள் பாதசாரிகள் மீதும், ரயில் கடவை பாதுகாவலர்கள் மீதும் கற்களையும், வேறு பொருட்களையும் வீசிஎறியும் கில்லாடித்தனங்கள் இப்பகுதியில் வழமையாக நடைபெற்று வருகின்றன.

கில்லாடிகளின் இந்த செயலினால் பாதசாரிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் கந்தர்மடம் பகுதியில் கடமைபுரியும் ரயில் கடவை ஊழியர் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு பலத்த காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (34)

## நீர் விநியோகம்

(வட்டுக்கோட்டை)

நகர கிராமிய நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் காக்கைதீவு மீன் பிடி கிராமத்தை அண்டியபகுதிகளுக்கு நீர்விநியோகம் செய்வது தொடர்பாக வலிதென்மேற்கு பிரதேச சபை (மானிப்பளார் கிராமசபை) பொறுப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.(21)

## குருநகர் மீனவர்களுக்கு

# ஜனசக்தி திட்டத்தின் கீழ் மீன்பிடி உபகரணம் வழங்கல்

(விசேட நிருபர்)

''இலங்கை ஜனாதிபதியின் முற்போக்கான திட்டங்களில் இதுவும் ஒன்று. உழைக்கும் திறன் இருந்தும் பொருளாதார வசதி இன்மையால் தாமும் முன்னேற முடியாமல், சமூகத்திற்கு உதவவும் முடியாமல் இருக்கிறார்கள். அதனை மாற்றி அமைக்க இத்திட்டம் உதவுகிறது. அடிமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் இத்திட்டத்தால் எடுக்கப்படுகிறது.''

குருநகர், புனித யாகப்பர் மண்டபத்தில் நடைபெற்ற ஜனசக்தித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு கடனாக மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து பேசிய பேராசிரியர் திரு. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமிய கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வைபவத்திற்கு பங்குத்தந்தை வண பி. எம். இம்மனுவேல் அடிகள் தலைமை வகித்தார்.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை மேலும் தெரிவித்ததாவது: ''நோர்வே போன்ற நாடுகளில் எல்லாக் காலங்களிலும் மீன்பிடிக்க முடியாது. நமது பிரதேசத்தில் உரிய பருவத்திற்கு முன்னரே மீன் பிடிப்பதால் மீன்வளம்குறைய வாய்ப்புண்டு. உதாரணத்திற்கு கூனிறால் பிடிப்பது தவிர்க்கப்பட வேண்டும். வெவ்வேறு மீன்பிடிப் பகுதிகளுக்கு நமது மக்கள் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தொழிலாளரின் உரிமைகள், சம்பளம் தொழில் வழங்குநர்கள் வழங்கவேண்டும்

## தொழில் ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''பல வருடங்களின் பின்பு வடமாகாணத்தில் அமைதியும் எமக்கு சாதகமான சூழ்நிலையும் நிலவுகிறது. இந்நிலையைப் பயன்படுத்தி தொழிலாளர்களின் உரிமையை வென்றெடுப்பதில் இன்மேல் எதுவித தயக்கமும் காட்டமாட்டோம்.

இவ்வளவு காலமாகவும் நாம் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தொழிலாளர் சட்டத்தை அமுல்படுத்த முடியாத சூழ்நிலை இருந்தது. இந்திய இராணுவம் வெளியேறியதை தொடர்ந்து தொழில் வழங்குநர்களுக்கு கொடுக்கப்பட்ட கடந்த கால சலுகைகள் எதுவும் இனிமேல் கிடைக்காது.''

என யாழ் மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

எமது யாழ். குடாநாட்டில் உள்ள மக்கள் தொகையில் ஐம்பதுக்கு ஐம்பது வீதம் தொழிலாளர்களே வாழ்கின்றனர். ஆகவே அவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு தொழிற்சங்கங்களும் பத்திரிகை ஸ்தாபனங்களும் தொழில் வழங்குனர்களும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும். தற்போதைக்கு இப்பகுதியில் நீதிமன்றங்களோ பொலிஸ் நிலையங்களோ இயங்காத போதிலும் தாம் மனிதாபிமான ரீதியில் தொழிலாளர்களின் உரிமையில் சரிசனை கொள்ள உள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் அவர் சில தீர்மானங்களையும் முன்வைத்துள்ளார். அவையாவன - சம்பள நிர்ணய சபையால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இதுதவிர அவர்களுக்கு மேலதிக நேர வேலைப் படிகளும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அனைத்து தொழிலாளர்களுக்கும், அவர்கள் தற்காலிக வேலையாளராகவோ தொண்டு வேலையாளராகவோ இருப்பினும் ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி என்பன கட்டப்படல் வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (லோ)

## நூல் ஆய்வரங்கு

(தீவுப்பகுதி)

வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தினால் ''காணி உறுதி'' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் ஆய்வரங்கு நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இளையவன் என்பவர் இந்நூலை எழுதியிருந்தார். கிராம சேவையாளர் திரு. கே. சிவகுலசிங்கம் இவ்வாய்வரங்கிற்கு தலைமை வகித்தார். வரவேற்புரையை கந்தையா சோதிதாஸன் நிகழ்த்தினார். இவ்வைபவத்தில் திரு. கே. சண்முகவடிவு ஆசிரியர், திரு. என். சட்டநாதன் ஆசிரியர், திரு. ரி. தர்மராஜா ஆசிரியர், செல்வி. எஸ். மாலினி, ஓய்வு பெற்ற அதிபர் திரு. ஆர். கந்தையா, செல்வி. அ. ஸ்ரீபாமா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். (15)

# அக்கரைப்பற்று கிராமத்தில் மக்கள் முன்னணி கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

''கடந்த பதினேழு வருடப் போராட்டத்தின் பின்பு இன்று இராஜ தந்திர ரீதியில் எமது இயக்கம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றது. இது எமது இலட்சியத்தை கைவிட்டு விட்டோம். என்பது பொருளாகாது. காலத்தின் தேவைக்கு ஏற்ப எமது போராட்ட வடிவத்தை மாற்றியுள்ளோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் குறிப்பிட்டார்.

ஆரைப்பற்றைக் கிராமத்தில் உள்ள பொதுமக்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறுதெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும் போது எதிர்காலத்தில் ஏனைய கட்சிகள் வந்து தமிழ் மக்களைக் குழப்பக்கூடாது. கொள்கை ரீதியாக எம்முடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதற்காகவே நாம் எமது இயக்கத்தை மக்களை உள்வாங்கச் செய்கின்றோம் என்றார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரமமூர்த்தி உரையாற்றும்போது எழுத்தாளர்கள் கலைஞர்கள் எமது இன்றைய போராட்டவரலாற்றை எழுத்துருவில் வடிக்க வேண்டும் என்றார்.

# புத்தளத்தில் பொலிஸார் அட்டகாசம். ஐவர் காயம்

(புத்தளம்)

சென்ற ஞாயிறு இரவு குடிபோதையில் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும்பொலிஸர் தாக்கியதில் புத்தளத்தில் ஐந்து பேர் காயமுற்றனர்.

புத்தளம் நகரில், வீதியில் எதிர்ப்பட்டவர்களைத் தாக்கியும் கடைகளை உடைத்தும் இவர்கள்அட்டகாசம்புரிந்துள்ளனர்.

ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிஸார் மீது எதிர்த் தாக்குதலை மேற் கொண்டுள்ளனர். சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த மற்றொரு பொலிஸ் கோஷ்டி ஆகாயத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தது

அட்டகாசம் புரிந்த பொலிஸார் புத்தளம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் இல்லையாம் ஜனாதிபதியின்நடமாடும் சேவை தொடர்பாக விசேட கடமைக்கென வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டவர்களே இந்த அட்டகாசங்களைப் புரிந்துள்ளனர்.

ஜனாதிபதியின் நடமாடும் சேவையில் பங்குகெண்டிருந்த அரசியல்வாதிகளின் கவனத்துக்கு இச் சம்பவம் உடனடியாகக் கொண்டுவரப் பட்டதாம்.

# யாழ். இந்து மத்திய கல்லூரியை ஆறு விக்கட்டுகளால் வென்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் மிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 169 ஓட்டங்களைப் பெற்றது. எம். முருந்தன் 49 ஓட்டங்களையும், எஸ். ஜெயசீலன், 30 ஓட்டங்களையும், பி. ஆர். நிரஞ்சன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். எஸ். வரதன் 5 விக்கெட்டுக்களையும், ரி. பிரபாகரன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

யாழ். இந்துக் கல்லூரி முதல் இன்னிங்சில் மொத்தம் 241 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயராஜ் 72 ஓட்டங்களையும், கோபிராஜ்52 ஓட்டங்களையும், கபிலன் 46 ஓட்டங்களையும், வரதன் 39 ஓட்டங்களையும் பெற்றனர் பிரபாகரன் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

யாழ். மத்திய கல்லூரி 2ஆவது இன்னிங்சில் மொத்தம் 132 ஓட்டங்களை பெற்றது. நிரஞ்சன் 44 ஓட்டங்களை பெற்றார், 42 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவர் இப்போட்டியில் மொத்தம் 11 விக்கெட்டுக்களை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்துக் கல்லூரி தனது 2ஆவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 65 ஓட்டங்களைப் பெற்றது. கோபிராஜ் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றார். அருநோதன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (42)

## நாகர்கோவில் கோத்தணியில் மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

நாகர்கோவில்கொத்தணிப் பாடசாலைகளுக் கிடையேயான மெய் வல்லுநர் போட்டி குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கொத்தணி அதிபர் திரு. கே. பரமகுரு தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரனும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜி. நேசநாயகம் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு, வீரபத்திரன் அங்கு உரையாற்றுகையில் உடற் பயிற்சி மெய்வல்லுநர் போட்டிகளின் முக்கியத்துவத்தினையும் பாடசாலையின் பங்கில் மெய்வல்லுநர் போட்டி வளர்க்கும் அறிவு, திறன், மனப்பாங்கு நுண்மதி, விட்டுக் கொடுக்கும் பண்பு சகிப்புத் தன்மை என்பனவற்றை வளர்க்கிறது என்று கூறினார்.

இக் கொத்தணியின் கீழ் உள்ள பத்துப் பாடசாலைகள் இதில் கலந்து கொண்டன. இப் போட்டியிலே சிரேஷ்ட பிரிவில் நாகர்கோவில் மகா வித்தியாலயம் 1 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 2ஆம் இடத்தை செம்பியன் பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் 3 ஆம் இடத்தை மணற்காடு றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

கனிஷ்ட பிரிவில் மாமுனை அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை 1 ஆம் இடத்தையும் 2 ஆம் இடத்தை செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும், 3ஆம் இடத்தை குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரன் சான்றிதழ்களையும் பதில்களையும் வழங்கினார். (25)


வாழ்க ஈழநாதம்!

பான்ஸிகுட்ஸ் பொருட்களும்
பாதணிகளையும்
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்!


## சி. சி. த. க. பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி. ப. சோமகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக திரு. ஏ. தங்கராசா (கல்வி அதிகாரி நிர்வாகம்) கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக திரு. அ. அருணகிரிநாதன் (கல்வி அதிகாரி உடற்கல்வி) திரு. மு. இராமலிங்கம் (கொத்தணி அதிபர் நல்லூர்) திருமதி ஜெகானந்தகுரு (அதிபர் யா/ நல்லூர் இந்து தமிழ்ப் பெண் பாடசாலை) கலந்து கொண்டார்கள்.

வெற்றி பெற்றோருக்கு கொத்தணி அதிபர் திரு. ம இராமலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

இவ்வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் செல்வராஜா இராஜ்குமார் 17வயது ஆண்கள் பிரிவில் மைதான நிகழ்ச்சிகளில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் மிகவும் சிறப்பாக பாய்ந்து முதல் இடத்தை பெற்றமை குறிப்பிடத் தக்கது. இவர் 10 புள்ளிகளைப் பெற்று இணைச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார். (42)

## சென். ஜோன்ஸ் இனிங்சால் வெற்றி

(யாழ். விளை. நிருபர்)

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் சென். ஜோன்ஸ்கல்லூரி இனிங்சால் வெற்றியீட்டியது. சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இனிங்சில் 280 ஓட்டங்களைப் பெற்றது பிரஷாந்தன் 83 ஓட்டங்களையும் ஜெயந்திரா 73 ஓட்டங்களையும் அணித்தலைவர் சதீசன் ஆட்டமிழககாமல் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி முதல் இனிங்சில் மொத்தம் 68 ஓட்டங்களைப் பெற்றனர். 2வது இனிங்சில் மொத்தம் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் முரளி சிறப்பாக பந்து வீசி இரண்டாவது இனிங்சில் 7 விக்கெற்றுக்களைவீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிசென். ஜோன்ஸ் கலலூரி மைதானத்தில் நடைபெற்றது. (42)

## யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகம் மட்டுநகர் செல்கிறது

யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் மட்டுநகர் விளையாட்டுக் கழகங்களின் அழைப்பின் பேரில் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக மட்டுநகர் செல்கின்றனர்.

பல வருடங்களின் பின்னர் வடக்கிலிருந்து கிழக்கிற்குச் செல்லும் முதலாவது உதைபந்தாட்டக் கோஷ்டி யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நகரில் தற்போது மிகவும் பலம் வாய்ந்த கழகமாக விளங்கும் யாழ். முஸ்லிம் கழகம் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மட்டுநகரில் பலம் வாய்ந்த உதைபந்தாட்ட கழகங்களுடன் மோதும். ((42


ஈழநாதம் வாழ்க! வளர்க!

சகலவிதமான மிதிவண்டிகள்
சிறுவர் வண்டிகள்


## யாழ்.பஸ்நிலையத்தில் பெண்மணியிடம் கொள்ளை

(கொழும்புத்துறை)

பஸ்ஸிற்காகக் காத்துநின்ற பெண்மணியின் பவுண் சங்கிலி பட்டப்பகலில் பறிபோனது.

இத் துணிகரத் திருட்டுச் சம்பவம், யாழ். பஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நிகழ்ந்தது.

சுன்னாகத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பஸ் நிலையத்தில், சுன்னாகம் பஸ்ஸிற்காகக் காத்து நின்றபோது பொலித்தீன் பையுடன் வந்த நபரொருவர் பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டாராம்.

தனது நான்கரைப் பவுண் பெறுமதியான சங்கிலியை இழந்த பிரஸ்தாபப் பெண்மணி அதிர்ச்சியடைந்து, அங்கு நின்றவர்களிடம் விடயத்தைக் கூறினார். ஆனால் திருடன் பிடிபடவில்லை.

கைவிடப்பட்ட

## கண்காட்சி

(பூநகரி)

முறைசாரக் கல்வித் திட்டத்தின் கீழ் பூநகரி மகாவித்தியாலயத்தில் ஆறு மாத காலமாக நடைபெற்ற உடைதயாரித்தல் பயிற்சியைத்தொடர்ந்து நடைபெற்ற கண்காட்சி விழாவை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளி. மாவட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். கமலநாதன் ஆரம்பித்து வைத்தார். பூநகரி ம. வி. பிரதி அதிபர் திரு. கே. குலசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்.மாவட்ட தொழில்நுட்பக் கல்வியதிகாரி திரு. எஸ். சுப்பரமணியம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் கண்காட்சியை பெருந்தொகையான பெற்றோரும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டனர். மேற்படி விழாவில் முறைசாரக்கல்வி வெளிக்கள உத்தியோகத்தர் செ. சி[illegible]னத்துறை விவசாயக்கல்வி அதிகாரி எஸ். தர்மரத்தினம் உட்படபவர் உறையற்றினர்


ஆதிகாலம் தாட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கைதேர்ந்த வைத்தியர்.

டாக்டர் டோமினிக்
(சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)
சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/292)


## க. பொ. த. (சா) பரீட்சை மேற்பார்வையாளர்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை மேற்பார்வையாளர்களையும் நிரந்தர நோக்குனர்களையும் வரும் இருபத்தைந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டிக் கொள்கிறார்.

இதில் புதிய பாடதிட்ட மேற்பார்வையாளர்களுக்கு காலை ஒன்பது மணிக்கும் பழைய பாடதிட்ட மேற்பார்வையாளர்களுக்கு பத்து முப்பதுமணிக்கும் கூட்டம் நடைபெறும் என பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கிறார். (லோ)

யாழ். நகரில்

## போக்குவரத்து விதிகள் திருப்திகரமாக நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்த யாழ்.மாநகர சபை போக்குவரத்து விதிகள் திருப்தி கரமான முறையில் நடைபெற்றதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

மக்கள் போக்குவரத்து கட்டுப்பாட்டு ஊழியர்களுடன் நல்ல முறையில் ஒத்துழைப்பதாகவும் இவ்வாறே தொடர்ந்தும் ஊழியர்களுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் சலிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டிக் கொண்டார்.

இதேவேளை நேற்று நகரில் எந்தவித போக்குவரத்து விபத்துக்களும் நடைபெறவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியிடங்களிலிருந்து வந்தவர்களுக்கு இந்தப் புதிய போக்குவரத்து முறைகளால் சிறிது தாமதம் ஏற்பட்டது. (லோ


ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள்

மெய்வல்லுநர் போட்டி வளர்க்கும் அறிவு, திறன், மனப்பாங்கு நுண்மதி, விட்டுக் கொடுக்கும் பண்பு சகிப்புத் தன்மை என்பனவற்றை வளர்க்கிறது என்று கூறினார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரன் சான்றிதழ்களையும் பதில்களையும் வழங்கினார். (25)

யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் மட்டுநகர் விளையாட்டுக் கழகங்களின் அழைப்பின் பேரில் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக மட்டுநகர் செல்கின்றனர்.

பல வருடங்களின் பின்னர் வடக்கிலிருந்து கிழக்கிற்குச் செல்லும் முதலாவது உதைபந்தாட்டக் கோஷ்டி யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நகரில் தற்போது மிகவும் பலம் வாய்ந்த கழகமாக விளங்கும் யாழ். முஸ்லிம் கழகம் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மட்டுநகரில் பலம் வாய்ந்த உதைபந்தாட்ட கழகங்களுடன் மோதும். ((42

பஸ்ஸிற்காகக் காத்துநின்ற பெண்மணியின் பவுண் சங்கிலி பட்டப்பகலில் பறிபோனது.

இத் துணிகரத் திருட்டுச் சம்பவம், யாழ். பஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நிகழ்ந்தது.

சுன்னாகத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பஸ் நிலையத்தில், சுன்னாகம் பஸ்ஸிற்காகக் காத்து நின்றபோது பொலித்தீன் பையுடன் வந்த நபரொருவர் பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டாராம்.

தனது நான்கரைப் பவுண் பெறுமதியான சங்கிலியை இழந்த பிரஸ்தாபப் பெண்மணி அதிர்ச்சியடைந்து, அங்கு நின்றவர்களிடம் விடயத்தைக் கூறினார். ஆனால் திருடன் பிடிபடவில்லை.

# போக்குவரத்து விதிகள் திருப்திகரமாக நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்த யாழ். மாநகர சபை போக்குவரத்து விதிகள் திருப்தி கரமான முறையில் நடைபெற்றதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

மக்கள் போக்குவரத்து கட்டுப்பாட்டு ஊழியர்களுடன் நல்ல முறையில் ஒத்துழைப்பதாகவும் இவ்வாறே தொடர்ந்தும் ஊழியர்களுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் சலிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டிக் கொண்டார்.

இதேவேளை நேற்று நகரில் எந்தவித போக்குவரத்து விபத்துக்களும் நடைபெறவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியிடங்களிலிருந்து வந்தவர்களுக்கு இந்தப் புதிய போக்குவரத்து முறைகளால் சிறிது தாமதம் ஏற்பட்டது. (லோ

## கைவிடப்பட்ட குழந்தைக்கு வளர்ப்புப் பெற்றோர்

(விசே நிருபர்)

கைவிடப்பட்டிருக்கும் ஆண் குழந்தையைத் தத்தெடுக்கத் தினமும் யாழ். கடற்கரை வீதி திருச்சிலுவை சுக நல (சிஸ்ரர்வார்ட்) நிலைத்திற்கு வளர்ப்புப் பெற்றோர் படையெடுத்து வருவதாக அறியப்படுகிறது.

நிலையத்தில் குழந்தைகளைத் தத்தெடுக்க விருப்பம் தெரிவித்து பதிவுசெய்துள்ளவர்களில் முன்னுரிமை அடிப்படையில் குழந்தையைக் கையளிக்க இருப்பினும் சில வார காலம் தமது பராமரிப்பில் வைத்திருந்த பின்பே தீர்மானிக்கப்படுமென்று வைத்திய சாலை மருத்துவ சகோதரி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## மண்டைதீவு பஸ்சேவை இல்லை மக்கள் அவதி

(தீவுப்பகுதி)

மண்டைதீவு பிரதான வீதி திருத்தல் இன்னும் முற்றுப் பெறாத காரனத்தினால் வட பிராந்திய போக்கு வரத்துச் சபை பஸ் சேவை யாழ்ப்பாணத்திற்கும் மண்டைதீவுவிற்கும் நடாத்தப் படவில்லையென்று மண்டைதீவு மக்கள் குறைபடுகின்றார்கள்.

இம்மக்கள் தமது குறைபாடுகளை விடுதலைப் புலிகளிடம் எடுத்தியம்பியுள்ளனர் அவர்களது குறையில் இங்குள்ள ஆஸ்பத்திரி வசதி குறைந்தாக இருக்கின்றதென்றும் குடிதண்ணீர் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்மென்றும், வெளியிடத்திலிருந்தும் வரும் மீனவர்களுக்கு போதியவசதிகள் செய்துதர வேண்டுமென்று முறையிட்டுள்ளனர். (15)


வாழ்க ஈழநாதம்!

பான்ஸிகுட்ஸ் பொருட்களும்
பாதணிகளையும்
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்!

அலோமாஸ்

சுன்னாகம்

(B.340)

பனை வெல்லம்

பனை வெல்லம் உடலுக்கு மிகவும் நல்லது, நன்மை பயப்பது. டாக்டர் ஹில்க்கையா பனை வெல்லத்தை உபயோகிப்பதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

1. மெலிந்து, தேய்ந்து வாடிய குழந்தைகளின் உடலை பனை வெல்லத்திலுள்ள ''குளுக்கோஸ்'' சீராக்குகிறது.
2. கணைச்சூடு நீங்கும்.
3. கருவுற்ற பெண்களுக்கும், மகப்பேறு பெற்ற தாய்மார்களுக்கும் ஏற்ற உணவு.
4. இரத்த அழுத்தத்தைத் தடுக்கிறது.
5. கன்னிவாத சுரம், நீர்க்கட்டு முதலிய வியாதி உடையவர்கள் சாப்பிடலாம். இது மிகவும் எளிதில் செமித்து இரத்தத்துடன் கலக்கின்றது.
6. இதயத்தை வலுவடையச் செய்கிறது.
7. கல்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படுவதைத் தடுக்கிறது.
8. நெஞ்செலும்பு தள்ளிய குழந்தைகளுக்கு சிறந்த பாதுகாப்பானது.
9. இரும்புச் சத்து பித்தத்தை நீக்குகிறது.
10. சொறி, சிரங்கு, ஜலதோஷம் முதலியவைகளை நீக்குகிறது.

தகவல்:
பனை அபிவிருத்திச் சபை

(B.317)

ஈழநாதம் வாழ்க! வளர்க!

❋ சகலவிதமான மிதிவண்டிகள்
❋ சிறுவர் வண்டிகள்
❋ உப உறுப்புக்கள்

நிதான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே எமது புதிய ஸ்தாபனமாகிய

சிறி பார்த்தசாரதி ஸ்ரோர்ஸ்

79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

B/343

ஈழநாதமே

நீ பல்லாண்டு காலம் வாழ்க!

துர்க்கார்ஸ்

மது விற்பனை நிலையம்

காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி
யாழ்ப்பாணம்.

B/341

ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

KALKI IMPEX
(PVT) LTD.
37, BANKSHALL STREET,
JAFFNA.

B/345

கலைமகள் சனசமூக நிலையம் நடாத்தும

விளையாட்டு விழா

காலம்: 15 - 5 - 1990

நிலைய விளையாட்டு தவிர
15 மைல் மரதன் ஓட்டம்
25 மைல் சைக்கிள் ஓட்டம்

நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கழகங்கள் மற்றும் வீர வீராங்கனைகள் யாவரும் எதிர்வரும் 10-5-90 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதம விருந்தினர்கள்
திரு. சூசை அவர்கள் (விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்கள் முன்னணி பொறுப்பாளர்)
திரு. வை. வேலும்மயிலும் (உதவி அரசாங்க அதிபர்)

அன்பர்கள் அனைவரையும் வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

துரை சண்முகசுந்தரம்
(செயலாளர்)
கலைமகள் சனசமூக நிலையம்
வல்லை றோட்,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

B13/6

**சிந்தனைக்கு**

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 22 - 03 - 90

# "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத" கதை

"உங்கள் பிள்ளைகளில் எந்தப் பிள்ளை நல்ல பிள்ளை?" என்று வீட்டுக்கு வந்த விருந்தினர் ஒருவர் வீட்டுக்காரரைப் பார்த்துக் கேட்டாராம்.

"அதோ கூரைமீது நின்று கொள்ளிக் கட்டையைச் சுழற்றிக்கொண்டு நிற்கிறானே அவன்தான் எங்கள் பிள்ளைகளில் நல்ல பிள்ளை" என்று வீட்டுக்காரர் பதிலளித்தாராம். மற்றப் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை!

இந்தமாதிரிக் 'கொள்ளி வைக்கும் நல்லபிள்ளைகள்' தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் மட்டும்தான் என்பதல்ல சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் இதே வேலையைத்தான் செய்து வருகின்றன.

இலங்கையில் இல்லாத "நாம் தமிழர்" இயக்கம் என்று கற்பனையில் ஓர் இயக்கத்தை சிருஷ்டி செய்து வகுப்புத் துவேஷத்தைப் பரப்பிய பெருமை 'தவச' பத்திரிகை நிறுவனத்தைச் சாரும்.

1971 ஆம் ஆண்டில் ஜே. வி. பி. யின் கிளர்ச்சியைத் தொடர்ந்து நாம் தமிழர் இயக்க பிரச்சாரத்தை இந்த நிறுவனப் பத்திரிகைகள் நிறுத்திக் கொண்டன.

"இலங்கையிலிருந்து அமைதிப்படை (இந்திய இராணுவம்) விலகிச் செல்லக்கூடாது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படை நின்று அங்கு பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் தென்னிலங்கையில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் இலங்கை அரசபடைகள் முழுக்கவனத்தையும் செலுத்த முடியும்."

இவ்வாறு 'தவச' நிறுவனத்திலிருந்து வெளியாகும் 'சன்' பத்திரிகை கடந்த வருடம் ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் கூறியிருந்தது.

இந்தப் பத்திரிகை நிறுவனத்துக்கு எவ்வளவு தேசபக்தி!

இரண்டு வாரங்களுக்கு முன் இந்த 'சன்' பத்திரிகையின் ஞாயிறு இதழான 'வீக்என்ட்' பத்திரிகை அட்டைப்படமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் சிலரின் புகைப்படங்களைப் பிரசுரித்திருந்தது.

உள்பக்கங்களிலும் இதேபோன்று படங்கள் சிலவற்றை வெளியிட்டு செய்திக் கட்டுரைகளையும் பிரசுரித்திருந்தது.

இதன்பின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்கள் இந்தப் படங்களை வைத்துச் சில கேள்விகளும் கேட்டனர். இவ்விடயத்தை அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில்

# ஈ. பி. ஆர். எல். எவ். இன் ஈழப் பிரகடனம்

# இவ்வாண்டின் கேலிக் கூத்து

"ஈழப் பிரகடனம்" என்ற சம்பவம் தொடர்பாக நடந்து கொண்டிருக்கின்ற இவ்விவாதத்தில் நாமும் எமது முக்கியமான சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறோம்

நாட்டின் விடுதலைப் போராட்டம் என்பது தமிழ் பேசும் மக்களின் துன்பங்களைத் தவிர்ப்பதற்காக ஏற்பட்ட போராட்டமாகும். இதன் காரணமாகவே ஆயுதம் தாங்கிய இப்போராட்டம் உருவாகியது. மக்களை அடிப்படையாக வைத்து எழுப்பப்பட்ட ஒரு போராட்டமே இதுவாகும் என்பதைக் கடந்தகால வரலாறு எமக்குத் தெளிவாகின்றது. மாறாக மக்களுடைய அபிலாசைகளுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லாத வகையில் செய்யப்பட்ட இந்தத் "தனிநாடு பிரகடனம்" என்பது அர்த்த மற்றதும் கேலிக்குரியதுமான ஒரு விடயமாகும். அதாவது தமிழ் பேசும் மக்களுக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இந்த ஈழப் பிரகடனத்தைச் செய்தவர்கள் தமிழ் பேசும் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் தமிழ்பேசும் மக்களுடைய பிரதிநிதிகளும் அல்ல. இன்று வடக்கு - கிழக்கில் கிராமம் கிராமமாகச் சென்று பார்த்தால் விடுதலைப் புலிகள் தான் தமிழ் பேசும் மக்களுடைய ஒரேயொரு சக்தியென்பதை நன்றாக அறிந்து கொள்ள முடியும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை - 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களும் ஒட்டுமொத்தமாக ஏற்றுகொண்டிருக்கின்றார்கள், இந்த மக்களுடைய விருப்பத்துக்குமாறாகத்தான் ஈ. பீ. ஆர். எல். எப். இனால் இந்த தமிழ் ஈழப் பிரகடனம் 1990ஆம் ஆண்டில் ஒரு கேலிக் கூத்தாகத்தான் - நவீன பகிடியாகத்தான் இருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையிலேயே பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்ற நிலை. இன்று நடக்கின்ற பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கு - அந்த சுமுகமான சூழ்நிலையைக் குழப்புவதற்கு - ஈ.பி ஆர். எல். எப். இனால் கொண்டுவரப்பட்ட இந்த "ஈழப்பிரகடனம்" சாலவும் பொருத்தமற்ற தொன்றாகும், இன்று இருக்கின்ற ஒரு சுமுகமான சூழ்நிலையை குழப்புவதற்காகவே கொண்டுவரப்பட்ட விடயம்தான் இதுவாகும் என்று நாங்கள் கருதுகின்றோம்,

தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளுக்காகக் கடந்த பத்து பதினைந்து வருடங்களாகப் போராளிகள்போராடியிருக்கின்றார்கள். எவ்வளவோ உயிர்களை நாம் இழந்துவிட்டோம். இவ்வளவு இழப்புகளுக்குப் பின்னரும் பேச்சு வார்த்தைகளின் மூலம் எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படும்என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் இங்கு பேசுகின்றோம். தமிழ் பேசும் மக்களுடைய உண்மையான பிரச்சினைகள் பற்றி கௌரவ உயர் கல்வி விஞ்ஞான, தொழில் நுட்பவியல் அமைச்சர் ஹமீத் அவர்களிடத்தில் நாங்கள் எடுத்துக் கூறியுள்ளோம். விடுதலைப் புலிகளுடனும் அவா பேசிக்கொண்டிருக்கின்றார். உண்மையான பிரச்சினைகளை அவர்கள் அங்கேமுன் வைத்திருக்கின்றார்கள்.

இங்கே பல எதிர்க் கட்சி உறுப்பினர்களும், சிறப்பாக முதலாவதாகப் பேசிய கௌரவ எதிர்க்கட்சி முதல்வரும் விடுதலைப் புலிகளை மிகவும் கேவலமான முறையில் அவர்கள் கொள்ளையர்கள் கொலையாளிகள் என்று கூறினார்கள். இது ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் மக்களைக் குறித்துக் கூறுவதாகத்தான் இருக்கும் என்று தமிழ்பேசும் மக்கள் கருதுவார்கள். அங்கே நடக்கின்ற சில கொலைகள் தனிநபர்களால் மட்டும் நடாத்தப்படவில்லை. ஒருவருட மாகாண ஆட்சியை நடாத்தியவர்கள் அப்பாவி மக்களைக் கொன்றார்கள். தமிழ்பேசும் மக்களின் மத்தியிலுள்ள எத்தனையோ அறிவாளிகளை, புத்திஜீவிகளைக் கொன்றார்கள். ஏன்? எமது ஆதரவாளர்களையும் தோழர்களையுமே தாபம் தெரிவிக்கின்ற அடிப்படையிலே - சில சலுகைகள் வழங்குகின்ற அடிப்படையிலே பல நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர, மக்களைத் துன்புறுத்தவோ, பாரிய பெரிய வரிகளை அவர்களிடத்திலிருந்து அறவிடுவதோ அங்கு நடைபெறவில்லை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயுள்ள மக்கள் இன்று இரவு 12 மணி வரைக்கும் றோட்டுகளில் செல்லுகின்றார்கள். 1983ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரைக்கும் அந்த மக்கள் அங்கே இருட்டிலேதான் வாழ்ந்தார்கள். அவர்கள் வெளியே செல்லவில்லை. அங்கே கட்சியிலிருந்தவர்கள் ஏற்படுத்திய பல நெருக்கடிகளின் மத்தியிலும் இராணுவக் கெடுபிடிகளின் மத்தியிலும் வாழ்ந்த மக்கள் இன்று ஓரளவு வெளியே வந்திருக்கின்றார்கள் தங்களுடைய பிரச்சினைகள் இனிமேல் தீர்ந்துவிடும் என்ற எண்ணத்திலே அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, விடுதலைக் கூட்டணி என்ற பெயரிலே ஈ. பி. ஆர். எல். எப். இனால் செய்யப்பட்ட இந்தப் பிரகடனத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதையிட்டு நாங்கள் யாரும் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. அதையிட்டு நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. இவர்கள் மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டவர்கள். பாராளுமன்றத் தேர்தலிலாக இருந்தாலும் சரி, மாகாணசபைத் தேர்தலிலாக இருந்தாலும் சரி இவர்கள் மக்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கவில்லை மக்கள் இவர்களுக்கு வாக்குகள் போடவில்லை. களவாகப் போடப்பட்டு இங்கே கள்ளப் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறார்களேயொழிய அவர்கள் உண்மையான பிரதிநிதிகளே அல்ல என்பதை நான் இங்கே அடித்துக் கூற விரும்புகின்றேன்.

சென்றகிழமை நான் யாழ்ப்பாணத்தில் முக்கியமான இடங்களுக்குச் சென்றிருந்தேன். கிராமம் கிராமமாகச் சென்றேன். இவர்களை மக்கள் சரியாக ...

அப்பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கையும் இருக்கின்றது. அப்பேச்சு வார்த்தைகளின் முடிவுகளை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றின் பலாபலன்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே கூறிவைக்க விரும்புகின்றேன்.

இன்று தமிழ் பேசும் மக்களுடைய இலட்சியப் போராட்டத்தை ஒரு குறுகிய வட்டத்துக்குள் பெருமாள் போன்ற மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் கொண்டு வர முயற்சிப்பதையிட்டுப் பெரிதாக நினைக்க வேண்டியதில்லை. இந்தக் குறுகியவட்டத்துக்குள் எமது பிரச்சினையை அடக்கவும் கூடாது. எமது இலட்சியம் அடங்கவும் கூடாது என்பதை நான் இங்கே கூறி வைக்க விரும்புகிறேன்.

அடுத்ததாக இங்கே எதிர்க் கட்சித் தலைவர் கூறுகிறார் ரோகண விஜேவீர போல விடுதலைப் புலிகளும் மக்களிடம் வரிகள் மூலம் மேலதிக பணத்தைப் பெற்று அங்கே மாடமாளிகை கட்டுகிறார்களோ தெரியாது என்று உண்மையில் அப்படியான ஒரு நிலைமை இல்லை அவர்கள் இலட்சியவாதிகள், நிச்சயமாக அவர்கள் ஆடம்பரமாகக் கோட்டை கோபுரங்கள் கட்டி வாழ்பவர்கள் அல்லர். மக்களுடைய உரிமைக்காக மக்களுடன் ஒன்றுசேர்ந்து அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள். நாங்கள் உண்மையில் போராட்டத்தை யதார்த்தமாகப் பார்க்கிறோம். சரியாக எங்களுடைய உரிமைகள் ஒவ்வொன்றையும் பார்க்கிறோம். நாங்கள் யாரிடமும் எங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்க தயார் இல்லை. இந்த நிலையிலேதான் அந்தப் பேச்சு வார்த்தையின் பலாபலன்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையிலிருந்து பிரிந்து விட்டது போல ஏதோ கதைக்கப்படுகின்றது. எதிர்க்கட்சிகள் ஆரவாரமிட்டன. சும்மா எங்கேயோ ஒரு சிலர்- மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர்- ஏதோ ஒன்

சினைகள் அல்ல. 1948 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுக்கு உரிமைகள் கிடைக்காததன் காரணமாக அவர்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். அந்த ஆயுதப் போராட்டம் ஓர் உச்சக்கட்டத்தையடைந்த பொழுது பல தலையீடுகள் ஏற்பட்டன. இன்று கூட அந்தப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் இடையே நிற்கவில்லை. சமர சமான ஒரு காலகட்டம்தான் இன்று நடந்து கொண்டிருக்கின்றது. அதில் பல பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த அடிப்படையிலேபேச்சவார்த்தையின் முடிவை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இப்படியான கேலிக்கூத்துகள் இல்லாமல் தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை மையமாக வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். அவர்கள் பலமான நிலையில் பேசுகிறார்கள். அதைக் குழப்புவதற்கு சில பிற்போக்குச் சக்திகள் திட்டமிட்டு வேலை செய்கின்றன. திட்டமிட்ட பிற்போக்குச் சக்திகள் இதில் தலையிட்டுச் சமாதான சூழலைக் குழப்பக் கூடாது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

(குறுக்கீடுகள்)

சந்தேகங்கள், கேள்விகள் இருந்தால் அவற்றை நீங்கள் கிளப்பலாம். அதற்கு நாங்கள் தகுந்த, உண்மையான இன்றைய நிலைப்பாடான கருத்துக்களை முன்வைக்க முடியும்.

மதிப்புக்குரிய, யோகசங்கரி அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார். பல நெருக்கடிகளைத் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கியிருப்பதைக் கவனத்திற்கொண்டு ஈழப் பிரகடனம் செய்யப்பட்டதாகக் கூறினார். அவர்கள் குழப்பமான நிலையிலே இருக்கிறார்கள். இன்றல்ல, அன்றிலிருந்தே குழப்பமான நிலையிலேதான் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள். மக்களின் தேவைப்பாட்டுக்கேற்பவே தனிநாட்டுப் பிரகடனம் செய்யப்படவேண்டும். பலமான நிலையில் ஈழப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பின் மக்கள் அதைப் பற்றி யோசித்திருப்பார்கள். மாறாக, பலவீனமடைந்த நிலையில், நாட்டைவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் அவ்வாறு பிரகடனம் செய்வதென்பது

மாகாணங்களில் இந்திய அமைதிப்படை நின்று அங்கு பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் தென்னிலங்கையில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் இலங்கை அரசபடைகள் முழுக்கவனத்தையும் செலுத்த முடியும்.''

இவ்வாறு 'தவச' நிறுவனத்திலிருந்து வெளியாகும் 'சன்' பத்திரிகை கடந்த வருடம் ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் கூறியிருந்தது.

இந்தப் பத்திரிகை நிறுவனத்துக்கு எவ்வளவு தேசபக்தி!

இரண்டு வாரங்களுக்கு முன் இந்த 'சன்' பத்திரிகையின் ஞாயிறு இதழான 'வீக்என்ட்' பத்திரிகை அட்டைப்படமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் சிலரின் புகைப்படங்களைப் பிரசுரித்திருந்தது.

உள்பக்கங்களிலும் இதேபோன்று படங்கள் சிலவற்றை வெளியிட்டு செய்திக் கட்டுரைகளையும் பிரசுரித்திருந்தது.

இதன்பின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்கள் இந்தப் படங்களை வைத்துச் சில கேள்விகளும் கேட்டனர். இவற்றுக்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''விடுதலைப் புலிகள் கட்டாயமாகப் பிள்ளைகளைத் தங்கள் இராணுவத்தில் சேர்ப்பதாக எமக்குத் தெரியவில்லை. சிறுபிள்ளைகளுக்கு ஆயுதப்பயிற்சி அளிப்பது உடல் வளர்ச்சியையும் உள வளர்ச்சியையும் பாதிக்கும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று அமைச்சர் ரஞ்சன் துருவித் துருவிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இந்தப் பதிலுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி பாலசிங்கம் கூறிய விளக்கம் நேற்றைய 'ஈழநாதம்' முதல் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது நேயர்கள் அறிந்ததே.

கட்டாயமாக நாங்கள் எவரையும் படையில் சேர்க்கவில்லை. கட்டாயமாகப் பிள்ளைகளைப் பிள்ளை பிடிகாரர் பிடித்துத் திரிந்தபோது ஆயிரக்கணக்கான பெற்றோர் தமது பிள்ளைகளை புலிகளின் பாதுகாப்பில் ஒப்படைத்தார்கள்; பலர் தப்பி வந்து எங்களுடன் சேர்ந்தார்கள். அவர்களுக்கு கல்வி, ஒழுக்கம், உடற்பயிற்சி போதித்து வருகிறோம்'' என்று கலாநிதி கூறியிருந்தார்.

பஸ்களிலும், ரயிலிலும், வீதிகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் பத்துப் பன்னிரெண்டு வயதுச் சிறுவர்கள் உட்பட இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் பலவந்தமாகப் பிடித்து இழுத்துச் செல்லப்பட்டனர், பிள்ளைகளைக் காப்பாற்ற முனைந்த பெற்றோர் நையப்புடைக்கப்பட்டனர்.

ரயிலிலிருந்து இறங்க மறுத்த இளைஞன் ஒருவன் சக பிரயாணிகள் முன்பாகவே சுட்டுக் கொல்லப்பட்டான்-

வீதிகளில் சிறுவர்களும் இளைஞர்களும் நடமாட முடியாது; வீடுகளில் தங்கியிருக்கவும் முடியாத அவலநிலை.

கஷ்டப்பட்ட குடும்பங்கள்கூட தங்கள் பிள்ளைகளை விமானத்தில் கொழும்புக்கு அனுப்பி உயிர் காப்பாற்றிய அவலம்-

இன்று தப்பி ஓடியவர்கள் அன்று செய்த வேலைகள் இவை.

கொழும்பிலும் திடீர்ச் சோதனைகளில் சிறுவரும் இளைஞரும் அனுபவித்த இன்னல்கள்-

இந்த அவலங்களைப்பற்றி 'தவச' நிறுவனப் பத்திரிகைகள் மூச்சுக்கூட விடவில்லை- இவை மட்டுமல்ல கொழும்பிலுள்ள எந்தப் பத்திரிகையுமே இந்த அட்டூழியத்தை எதிர்த்து ஒருவார்த்தைகூட எழுதவில்லை.

இப்பொழுது தமிழ்ச் சிறுவர்களின் உடல்வளம், உளவளம் பற்றி 'தவச' நிறுவனமும் மற்றும் கொழும்புப் பத்திரிகையாளர்களும் அழுகிறார்களாம்.

''ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத'' கதைதான்!

---

தான் தமிழ் பேசும் மக்களுடைய ஒரேயொரு சக்தியென்பதை நன்றாக அறிந்து கொள்ள முடியும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை - 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களும் ஒட்டுமொத்தமாக ஏற்றுகொண்டிருக்கின்றார்கள், இந்த மக்களுடைய விருப்பத்துக்குமாறாகத்தான் ஈ. பீ. ஆர். எல். எப். இனால் இந்த தமிழ் ஈழப் பிரகடனம் 1990ஆம் ஆண்டில் ஒரு கேலிக்கூத்தாகத்தான் - நவீன பகிடியாகத்தான் இருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையிலேயே பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகின்றோம். இன்று மிகவும் பலமான ஒரு நிலையில்தான் விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பேச்சு வார்த்தைகளிலே முறிவுகள் ஏற்பட்டால் அந்த 35 லட்சம் மக்களும் விடுதலைப் புலிகளுடன் ஒன்று சேர்ந்து தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவார்கள். இது தான் உண்மை

உறுப்பினர்களும், சிறப்பாக முதலாவதாகப் பேசிய கௌரவ எதிர்க்கட்சி முதல் வரும் விடுதலைப் புலிகளை மிகவும் கேவலமான முறையில் அவர்கள் கொள்ளையர்கள் கொலையாளிகள் என்று கூறினார்கள். இது ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் மக்களைக் குறித்துக் கூறுவதாகத்தான் இருக்கும் என்று தமிழ்பேசும் மக்கள் கருதுவார்கள். அங்கே நடக்கின்ற சில கொலைகள் தனிநபர்களால் மட்டும் நடாத்தப்படவில்லை. ஒருவருட மாகாண ஆட்சியை நடாத்தியவர்கள் அப்பாவி மக்களைக் கொன்றார்கள். தமிழ்பேசும் மக்களின் மத்தியிலுள்ள எத்தனையோ அறிவாளிகளை, புத்திஜீவிகளைக் கொன்றார்கள். ஏன்? எமது ஆதரவாளர்களையும் தோழர்களையுமே கொன்றார்கள். நாங்கள் அவர்களுக்கு எந்தவிதமான இடைஞ்சலையும் கொடுக்கவில்லை. அந்த மாகாண ஆட்சிக்கு எதிராகப் போனதில்லை. அந்த மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் மேலும் பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் நாங்கள் அப்போதும் விவாதித்தோம்.

வடக்கு - கிழக்கிலே இன்று அமைதி நிலவுகின்றது. கொலை, கொள்ளைகள் அங்கே நடைபெறவில்லை. போராட்டத்திலே ஈடுபட்டுத் தங்கள் உயிர்களை இழந்த பல ஆயிரம் பொது மக்களுக்கும் போராளிகளுக்கும் அனு

இல்லை. இவர்கள் மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டவர்கள். பாராளுமன்றத் தேர்தலிலாக இருந்தாலும் சரி, மாகாணசபைத் தேர்தலிலாக இருந்தாலும் சரி இவர்கள் மக்களுடைய அபிலாசைகளைப் பிரதிபலிக்கவில்லை. மக்கள் இவர்களுக்கு வாக்குகள் போடவில்லை. களவாகப் போடப்பட்டு இங்கே கள்ளப் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறார்களேயொழிய அவர்கள் உண்மையான பிரதிநிதிகளே அல்ல என்பதை நான் இங்கே அடித்துக் கூற விரும்புகின்றேன்.

சென்றகிழமை நான் யாழ்ப்பாணத்தில் முக்கியமான இடங்களுக்குச் சென்றிருந்தேன். கிராமம் கிராமமாகச் சென்றேன். இவர்களை மக்கள் சரியாக நோக்குகிறார்கள். விடுதலைப் புலிகளை மக்கள் நூற்றுக்குநூறு வீதம் நேசிக்கின்றார்கள். அவர்கள் மக்களுடைய சக்தி; அவர்கள்தான் போராட்டத்துக்கு உரியவர்கள் என்பதைக் காண்கிறார்கள். எனவே, மனச்சாட்சியுள்ள எந்தவொரு தமிழனும் இந்தத் தமிழீழப் பிரகடனத்தை ஆதரிக்கப்போவதில்லை. பலமான நிலையிலே அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்குச் செய்யப்பட்ட திட்டமிட்ட ஒரு சதியாக இது இருக்குமே தவிர, உண்மையாக இதை ஓர் ஈழம் என்று ஏற்க முடியாது. உண்மையில் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையென்றால் இனிமேல் நடக்கின்ற போராட்டத்திலே ஒரு போராட்டக்குழு மட்டும் இருக்காது. 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களும் ஒன்று சேர்ந்து அந்த உரிமைக்காகப் போராடுவார்கள். அவர்கள் பலம் பொருந்திய நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுகிரண்டு பேசுவார்கள் என்பதை அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் இங்கே இருக்கின்ற அனைவருக்கும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் தீர்மானத்தையிட்டு யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. பலமில்லாத நிலையிலே, நாட்டைவிட்டு வெளியே ஓடிக்கொண்டிருக்கிற நிலையிலே, ஒருவர், இரண்டு பேர் கூறிவிட்டுப் போவதையிட்டு நாம் பெரிதாகப் பயப்பட வேண்டியதில்லை. உண்மையில் எங்களுடைய பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அவற்றையிட்டுத் தற்பொழுது மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள்கூட அக்கறையெடுத்துப் பேசுகிறார்.

அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள். நாங்கள் உண்மையில் போராட்டத்தை யதார்த்தமாகப் பார்க்கிறோம். சரியாக எங்களுடைய உரிமைகள் ஒவ்வொன்றையும் பார்க்கிறோம். நாங்கள் யாரிடமும் எங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்க தயார் இல்லை. இந்த நிலையிலேதான் அந்தப் பேச்சுவார்த்தையின் பலாபலன்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையிலிருந்து பிரிந்து விட்டது போல ஏதோ கதைக்கப்படுகின்றது. எதிர்க்கட்சிகள் ஆரவாரமிட்டன. சும்மா எங்கேயோ ஒரு சிலர்- மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர்- ஏதோ ஒன்றைப் பிரகடனப்படுத்தியதுடன் எல்லாரும் அவசரப்பட்டு கூச்சலிட்டு அரசியல் இலாபம் தேட முனைகின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நீங்கள் நன்கு ஆராயுங்கள். அவர்களுடைய பிரச்சினைகள் இன்று நேற்று ஏற்பட்ட பிரச்

கூறினார். பல நெருக்கடிகளைத் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கியிருப்பதைக் கவனத்திற் கொண்டு ஈழப் பிரகடனம் செய்யப்பட்டதாகக் கூறினார். அவர்கள் குழப்பமான நிலையிலே இருக்கிறார்கள். இன்றல்ல, அன்றிலிருந்தே குழப்பமான நிலையிலேதான் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள். மக்களின் தேவைப்பாட்டுக்கேற்பவே தனிநாட்டுப் பிரகடனம் செய்யப்படவேண்டும். பலமான நிலையில் ஈழப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பின் மக்கள் அதைப் பற்றி யோசித்திருப்பார்கள். மாறாக, பலவீனமடைந்த நிலையில், நாட்டைவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் அவ்வாறு பிரகடனம் செய்வதென்பது பலவீனத்தை மறைப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையேயாகும். இதுவே உண்மை நிலை என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**ஈ. பரராசசிங்கம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சில பகுதிகள்.**

---

## மக்கள் மடல்

# பாடசாலை நூலகங்கள்?

பத்திராதிபர்,

ஈழநாதம்.

யாழ். குடாநாட்டில் அநேகமான பாடசாலைகளில் நூலகங்கள் காணப்பட்டும் அவற்றைத் திறமையான முறையில் நடாத்துவதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட நூலகர்கள் இல்லாமையால் அவைகள் செயற்படமுடியாத நிலையில் உள்ளன. சில பாடசாலைகளில் ஆசிரியர்களும், வேறுசில பாடசாலைகளில் நூலகவியல் பற்றிய அறிவில்லாத பழைய மாணவர்களும் நூலகத்தை பரிபாலிக்கின்றனர். இதனால் முழுநேரமும் நூலகம் திறந்து வைக்கப்படாமல்அவர்களுக்கு வசதியானநேரங்களில் மட்டும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் பல உள்ளூராட்சி மன்றங்களிலும் இந்த நிலமையே காணப்படுகிறது. எனவே இக்குறைபாடு நீக்கப்படுமா? நூலகவியல் கல்வி இலங்கை நூலகவியல் சங்கத்தினால் நடாத்தப்படுகிறது. இக்கல்வியில் முதல் நிலை, இடைநிலைப் பரீட்சைகளில் சித்தியெய்திய மாணவர்கள் பலர் வேலைவாய்ப்பின்றி கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வேலைவாய்ப்பு கருதி இப்பயிற்சி நெறியைக் கற்றும் எந்தவித பிரயோசனமும் இன்றி வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே பயிற்றப்பட்ட நூலகர்களை நூலகங்களுக்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள், உள்ளூராட்சி ஆணையாளர் எவருமே இதுவரை கவனமெடுக்கவில்லை. எனவே இனியாவது இவர்கள்இதனைக் கருத்தில் கொண்டு ஆவன செய்வார்களா?

இங்ஙனம்,

க. சுமதி, க. சாந்தினி,
லோ. நிரஞ்சன், க. சிவகலா
ம. சாந்தினி யாழ்ப்பாணம்

---

# நியமனத்தில் தகைமை, திறமை இனவிகிதாசாரத்திற்கு முதலிடம்

## அரசஎம்.பிக்கள் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் சகல நியமனங்களும் தகைமை, திறமை இனவிகிதாசாரம் என்ற அடிப்படையில் மட்டுமே கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாச அரசாங்க பாராளுமன்றக்குழு கூட்டத்தில் கூறியுள்ளார்.

அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்

அரசாங்க சேவையில் உள்ள நியமனங்கள், பதவி உயர்வுகள் என்பவற்றுக்கு அரசியல்வாதிகள் தலையிடுவதோ' சிபார்சுக்கடிதம் வழங்கவோ கூடாது எனவும் ஜனாதிபதி கூறினார்.

எவரது தலையீடுகளுமின்றி தகைமை, திறமை கொண்டவர்களுக்கு மட்டுமே நியமனங்கள் கிடைத்தால் மக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

---

# யாழ். நூலக புனருத்தாரண நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

யாழ். மாநகர சபை நூலகம் புனருத்தாரணம் செய்யப்படுவது சம்பந்தமாக அடுத்த சில வாரங்களில் கட்டடக் கலைஞர்களுடன் ஆலோசனைகள் செய்யப்பட உள்ளது. நூலகத்தின் பின்புறம் முற்றாக அகற்றப்பட்டு புதிய வடிவமைப்பு செய்யப்பட உள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் நூலகத்திற்கு தேவையான புதிய பல புத்தகங்களையும் தளபாடங்களையும் பெற்றுக்கொள்வதற்கான அன்பளிப்புகளை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (லோ

ஈழநாதம்

# ஓரிஸா குழு அகதிகளும் தனித்தனி முகாம்களில்; சிலர் பேசவே பயம்!

## மாகாணசபை உறுப்பினர் சிலர் தனி இடத்தில்!

மல்கான்கிரி (ஒரிஸா)

இந்திய அரசையும், ஒரிஸா மாநில அரசையும் புண்படுத்தும் முறையில் நாம் நடந்து கொள்ளமாட்டோம். எமக்குப் புகலிடம் தந்தவர்களுடன் நாம் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வோம். இவ்வாறு ஒரிஸாவில் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். குழுவின் பேச்சாளர் குகன் சென்னை ஹிந்து நாளிதழ் நிருபர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இ. என். டி. எல். எவ். ஈ. பி. ஆர். எல். எவ். குழுக்களின் உயர் மட்டத் தலைவர்கள் முகாம்களில் தங்கியுள்ளார்களா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இரு முகாம்களிலும் உள்ளனர். ஆனால், தற்சமயம் அவர்கள் பத்திரிகை நிருபர்களுடன் பேச விரும்பவில்லை என்றார்.

முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், கோமளராஜ் சின்னையா, ஆறுமுகலிங்கம் குமரகுரு, பரமேஸ்வரமூர்த்தி, விநாயகமூர்த்தி ஆகியோர் தன்னுடன் முகாமில் தங்கியுள்ளனர் என்றும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் புஸ்பராஜ் கிழக்கு மாகாணத்திலிருந்து கடல்மார்க்கமாகத் தப்பியோடும்போது அகால மரணமாகிவிட்டார் என்றும் தெரிவித்தார்.

வவுனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கிய குழுக்களும், அவர்கள் ஆதரவாளர்களும் தான் முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஒரிஸாவில் கோராபுட் நகரிலிருந்து 127 கி. மீ. தூரத்திலுள்ள மல்கான்கிரி முகாமில் ஈ. என். டி. எல். எவ். வும், அவர்களது ஆதரவாளர்களும், சக்திகுடா நீர்ப்பாசன அணைக்கட்டுக்கு அருகிலமைந்த முகாமில் ஈ. பி. ஆர். எல் எவ். குழுவும், அவர்களின் ஆதரவாளர்களும் தங்கியுள்ளனர். இம்முகாமில் தான் அறுபதுகளின் நடுப்பகுதியில் கிழக்கு வங்காள அகதிகளும் இருந்தனர். ஆந்திரா விசாகபட்டினம் வழியாக இம்முகாமை அடைவது சுகம் என்றாலும், இரு இடங்களுக்குமிடையில் உள்ள தூரம் 400 கி. மீ. ஆகும். கோராபுட் பொலீஸ் அத்தியட்சகர் ஜி. பி. சிங் முகாம்களுக்குப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகிறார்.

பத்திரிகையாளர் அகதிமுகாமுக்கு வெளியில் நிற்கிறார்கள் என்பதை அறிந்ததும் பலர் முண்டியடித்துக்கொண்டு பேச வந்தார்களாம். இதேவேளை அகதிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஒலிபெருக்கியில் அறிவுரைகள் வழங்கப்பட்டபடி இருந்ததாம்.

## வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்துகள் பற்றாக்குறை

(வவுனியா)

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதி மருந்தகத்திற்குக் குறைந்த அளவான குளிகைகள் வழங்கப்படுவதனால், வரிசையின் இறுதியில் வரும் நோயாளர்கள் அல்லது தாமதித்து வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

ஆஸ்பத்திரிக் களஞ்சிய அறையிலிருந்து பாவனைக்குத் தினமும் குறைந்த அளவான குளிகைகளே பெறப்படுகின்றன.

பக்றின், அம்பிசிலின், ஏறுத்தலா மைசின், பிரினி சிலோன் போன்ற மருந்துக் குளிகைகளே போதாமல் இருப்பதாக இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நோயாளர்களில் பலர் தனியார் மருந்துக் கடைகளில் இக் குளிகைகளைப் பெறுகின்றனர் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ். பாடசாலைகளிலும், 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொது மக்களுக்குமாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவின் கொடித் தினம் நடை பெறவுள்ளது.

## இரண்டாவது கொடுப்பனவு

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் 24-03-90 சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை ஜே/49 வண்ணார்பன்னைவடமேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1265 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் 2ஆம் கட்ட நிவாரணப் பணம் ரூபா 1000/- வழங்கப்படும்.

25-3-90 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 1 மணிவரை ஜெ/57 கோண்டாவில் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1394 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் 2ஆம் கட்ட நிவாரணப்பணம் ரூபா 1000/- வழங்கப்படும்.

தங்கள் பகுதி கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப்பதிவு இலக்கத்தினை பெற்றுக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.

வுனியா

## நீதிமன்றம் இயங்காததினால் பலருக்கு கொடுப்பனவு இல்லை

(வவுனியா)

வவுனியா நீதிமன்றம் இயங்காததைத் தொடர்ந்து பல பாத காலமாக மரண விசாரணை அதிகாரிகளுக்கும், பிரேத பரிசோதனை அதிகாரிகளுக்கும் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை,

1988ஆம் ஆண்டு யூன்மாதம் ஆறாம் திகதியிலிருந்து வவுனியா நீதிமன்றம் இயங்கவில்லை.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 22ஆந் திகதி இரவு இந்தியப் படையினருடன், தங்கி இருந்த இயக்கக் குழு ஒன்று குறிப்பிட்ட நீதிமன்றக் கட்டடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தது.

இச் சம்பவத்தினால் அக்கட்டடம் சிதறி உடைந்தது. இன்றும் அக்கட்டடம் அதே நிலையிலேயே காட்சியளிக்கின்றது.

மேற்படி நீதிமன்றக் கட்டடத்திற்குள்ளிருந்த தளபாடங்களையும், பொருட்களையும் களவாடுவதற்காகவே அந்த இயக்கக் குழு நீதிமன்றக் கட்டடத்தைத் தகர்த்தது. இதனால் வழக்கு அறிக்கைகளும், காணி உறுதிகளும் சேதத்துக்குள்ளாயின. (தி)

## வீடமைப்பு கட்டடத்தில் மீண்டும் சில திணைக்களங்கள்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கடந்த 1987ஆம் ஆண்டின் பின் மீண்டும் யாழ். செயலகத்தில் உள்ள வீடமைப்புச் செயலகக்கட்டிடத்தில்செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்திய அமைதிப் படையினர் யாழ். வீடமைப்புச் செயலகத்தில் முகாமிட்டிருந்தமையினால் முன்னர் வீடமைப்புச் செயலகத்தில் இயங்கி வந்த யாழ்.பிரதேச உள்ளூராட்சித் திணைக்களம் இரண்டரை வருடகாலமாக இடம் பெயர்ந்து ...ள்ள கட்டிடத்தில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது.

யாழ்.வீடமைப்புச் செயலகக் கட்டிடத்தில் தற்போது இலங்கைப்பனை அபிவிருத்திச் சபைத் தலைமைத் திணைக்களம், தேர்தல்திணைக்களம், மாகாண வீடமைப்புத்திணைக்களம், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியன மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. (24)

## சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடத்தும் சர்வதேச மகளிர் தினவிழா, எதிர்வரும் சனிக்கிழமை இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவிற்கு திருமதி சசிதேவி கந்தையா தலைமை வகிப்பார், இவ் விழாவினை திரு. சி. சிவமகராசா ஆரம்பித்து வைப்பார். திரு. இ. ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். பலநோக்குக் கூட்டுறவுச். சங்கத்தினரால் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

## யாழ். தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தபால் திணைக்களத்தில் பல சமயாசமய ஊழியர்கள் ஒரு வருடத்துக்கு மேலாக வேலை செய்து வருகிறார்கள். ஆனால் ஒரிரு மாதங்களுக்குள் இவ்வலுவலகத்தில் சிலர் விசேட சலுகையில் வேலைக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், ஒரு வருடத்துக்கு முன்னால் சேர்க்கப்பட்டவர்களுக்கு வேலை ஒழுங்காக வழங்கப் படுவதில்லை என்ற கோரிக்கைகளை முன்வைத்து இன்று யாழ் தபால் ஊழியர் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

நியாயமான தீர்வு வரும் வரை போராட்டம் நீடிக்கும் என்று அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## 5 லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சியில் டிப்போ!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி டிப்போ ஐந்து லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதியை யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கிளிநொச்சியில் முன்னர் அரசாங்க அதிபராக இருந்த போது அரசிடமிருந்து பெற்றுக்கொடுத்தார்.

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து டிப்போ ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக இதன் ஊழியர்கள் போதிய வசதியின்றி தற்போதுள்ள கட்டடத்தில் கருமங்களை ஆற்றி வந்தனர். (லோ)

## யாழ். பெரியாஸ்பத்திரி நிர்வாகத்துடன் அரச அதிபர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி நிர்வாகத்துடன் ஏப்ரல் மாதம் 2-ம் திகதி ஒரு கலந்துரையாடல் நடாத்தப்படவுள்ளதாக, யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் இதுபற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் குறைபாடுகள், கட்டிட வசதிகள் என்பன இங்கு ஆராயப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பெருமாளை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமாளைக் கொண்டுசென்று புகலிடமளித்திருக்கிறீர்களா? என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது இது அரசியல் கேள்வி, எமக்கு அப்பாற்பட்ட விஷயம் ஆனாலும் நாம் கொண்டுசெல்லவில்லை என்பதே எனது பதில் என்று கல்கத் கூறினார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த ஆயிரத்துநூற்றிப்பதினைந்து பேர் பலியாகியுள்ளனர். இரண்டாயிரத்து முந்நூற்றி எண்பத்துநான்கு பேர் காயமடைந்தனர் என்றும் ஜெனரல் கல்கத் தெரிவித்தார்.

## பாலயடிவெட்டையில் லோறன்ஸ்நல்லடக்கம்

(மட்டக்களப்பு)

கடந்த பத்தொன்பதாம் திகதி மரணமடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கணேசராசாவின் (லோறன்ஸ்) பூதவுடல் அவரது சொந்த இடமான பாலயடி வெட்டையில் அடக்கம் செய்யப்பட்டது. இவரது மரண ஊர்...

### விடைத்தாள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழ்ப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### வல்லாதிக்கத்தை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளை அழிக்க, சமாதா...

### திருடர்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுழற்றல் போன்ற முன்னர் நடைபெற்றுவந்த திருட்டுக்...

### பரீட்சை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைப் புலிகள் கோரியுள்ள...

தியப் படையினருடன், தங்கி இருந்த இயக்கக் குழு ஒன்று

காணி உறுதிகளும் சேதத்துக் குள்ளாயின. (தி)

# வீடமைப்பு கட்டடத்தில் மீண்டும் சில திணைக்களங்கள்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கடந்த 1987ஆம் ஆண்டின் பின் மீண்டும் யாழ். செயலகத்தில் உள்ள வீடமைப்புச் செயலகக்கட்டிடத்தில்செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்திய அமைதிப் படையினர் யாழ். வீடமைப்புச் செயலகத்தில் முகாமிட்டிருந்தமையினால் முன்னர் வீடமைப்புச் செயலகத்தில் இயங்கி வந்த யாழ்.பிரதேச உள்ளூராட்சித் திணைக்களம் இரண்டரை வருடகாலமாக இடம் பெயர்ந்து யாழ்.கச்சேரி- நல்லூர் வீதியிலுள்ள கட்டிடத்தில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது.

யாழ்.வீடமைப்புச் செயலகக் கட்டிடத்தில் தற்போது இலங்கைப்பனை அபிவிருத்திச் சபைத் தலைமைத் திணைக்களம், தேர்தல் திணைக்களம், மாகாண வீடமைப்புத்திணைக்களம், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியன மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. (24)

## ஆசிரிய....

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர் பயிலுனர்களுக்கான மூன்று வருட காலப் பயிற்சி வகுப்புகள், வைகாசி மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் நிரந்தர நியமனத்திற்காக 2500 பயிலுநர் ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 454 பேருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஜனசக்தி---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து மீன்பிடித் தொழிலை விருத்தி செய்தால் இடப் பிரச்சினைகளும் குறையும்.'' எனத் தெரிவித்தார்.

யாழ்.உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப் பிள்ளை கூறியதாவது:

''ஜனசக்திக்கு உரிய குடும்பப்பிள்ளைகளை பல்வேறு பயிற்சித்துறைக்கு அழைத்த போதும் சரியாக அவர்களை இனங்காண்பது சிரமமாக இருந்ததால் உத்தியோகத்தர்கள் நேரடி முயற்சியால் 161 பிள்ளைகளை பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கு அனுப்பி வைக்க முடிந்தது. உணவு முத்திரை, பயிற்சி இவை மட்டுந்தான் ஜனசக்தியின் தார்ப்பரியம் அல்ல. இனிவரும் நடவடிக்கைகள் தான் இத்திட்டத்தின் முக்கிய கட்டங்களாகும்.'' என்றார்.

வேறு பலரும் உரையாற்றினார்கள்.

## விடைத்தாள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை செய்வதற்கு ஐம்பது ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

விடைத் தாள்கள் மறுபரி சோதனை செய்யப்பட்டதும் பரீட்சையின் இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

## போராட்டத்தை....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

ணில் நிகழ்த்திய இந்தியப் படையினர் உண்மையை உணர்ந்து கொண்டனர்.

எமது மக்களின் இறைமைக்கும், நல்வாழ்விற்குமாக நாம் எத்தகைய இழப்புக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். இந்தியப் படைகளுடனான போர் நடவடிக்கைகளின் போது தமது உயிர்களை இழந்துவிட்ட எங்களது மக்களையும், வீர மரணத்தையும் தழுவிக் கொண்ட எமது போராளிகளையும் நாம் மீண்டும் நினைவு கூர்கின்றோம்.

## மட்டக்களப்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட சகல வேலைகளும் ஸ்தம்பித்து நின்றன.

அஞ்சல் தொலைத் தொடர்பு ஊழியர்களும் தமது தொழிற் சங்க நடவடிக்கையைப் பற்றித் தீர்மானிப்பதற்கு இம் மாதம் இருபத்தைந்தாம் திகதி கூடி ஆலோசிக்கவிருக்கின்றனர்.

## ஒரிஸா . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தையடுத்து சட்டப் பேரவையில் கூச்சல் எழுந்தது.

தற்போது பட்ஜட் மீதான விவாதம். நடைபெறுவகால் அதனுடன் தொடர்பின்றி இது விவாதிக்கப்படும் என முதலமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

## சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடத்தும் சர்வதேச மகளிர் தினவிழா, எதிர்வரும் சனிக்கிழமை இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ் விழாவிற்கு திருமதி சசிதேவி கந்தையா தலைமை வகிப்பார், இவ் விழாவினை திரு. சி. சிவமகராசா ஆரம்பித்து வைப்பார். திரு. இ. ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். பலநோக்குக் கூட்டுறவுச். சங்கத்தினரால் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

## தமிழ்ப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். ராதா கேட்ட போது முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஒரிஸாவுக்கு அனுப்பப்பட்ட தமிழ் அகதிகள் தமிழ்ப்போராளிக்குழுக்கள் என்றும், இதனால்தான் அவர்கள் தமிழகத்தில் இறங்க அனுமதிக்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டனர் எனவும் முதலமைச்சர் கூறினார்.

அகதிகளாக வருபவர்களுக்கு தமிழகம் புகலிடம் அளிக்கும் என்று கூறிய முதலமைச்சர் 1983-க்கு பின்னர் சுமார் ஒரு லட்சம் இலங்கைத் தமிழர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளனர். இவர்களில் பதினெட்டுப் பேர் மட்டுமே தர்மை அகதிகளாக பதிவு செய்துள்ளனர் என்றார்,

இலங்கைக்கு திரும்பாத அகதிகளில் பலர் தமிழக மக்களுடன் ஒன்றாக தமிழகத்தின் பல இடங்களில் வாழுகின்றனர்.

அண்மையில் மூவாயிரம் அகதிகள் இங்கு அகதிகளாக வந்தபோது தமிழக அரசு ஆதரவும் கந்தது அதிகாரிகள் இவர்களுக்கு தேவையானவற்றை செய்து வந்தனர் என்றும் அவர் சொன்னார்.

## தமிழ்நாட்டில் ஆயுதப் பயிற்சி

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் ஆயுதப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுவதாக மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. வரதராஜன் கூறிய போது, காவல்துறையினர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் முதலமைச்சர் சொன்னார்.

## மட்டுநகர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இருபெண்கள் நேற்றும் சுழற்சிமுறையில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர். (37)

# 5 லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சியில் டிப்போ!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி டிப்போ ஐந்து லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதியை யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கிளிநொச்சியில் முன்னர் அரசாங்க அதிபராக இருந்த போது அரசிடமிருந்து பெற்றுக்கொடுத்தார்.

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து டிப்போ ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக இதன் ஊழியர்கள் போதிய வசதியின்றி தற்போதுள்ள கட்டடத்தில் கருமங்களை ஆற்றி வந்தனர். (லோ)

## வல்லாதிக்கத்தை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளை அழிக்க, சமாதானப் போர்வையின் ஜனநாயகத்தின் கனவின், தமிழ் பேசும் மக்களின் காவலன் என்ற போர்வையில் எம்மக்கள் மீது போர் தொடுத்தது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும்அவ்வறிக்கையில் தமிழீழமே போர்க்களமாகியது அது இந்திய இராணுவத்தின் பரிசோதனைக்களமாகியது. ஒரு சிறிய தேசம் இரண்டு நாளில்அடிமையாகும் என்பது கணிப்பு. போர் தடுக்க வந்தவர்கள் போர் புரிந்தார்கள் ஆயுதம் களைய வந்தவர்கள் ஆயுத மயப்படுத்திச் சென்றார்கள். பாதுகாப்பதாக வந்தவர்கள் படுகொலை புரிந்தனர். புலிகளை இராணுவ ரீதியாக அழிக்க முயன்றார்கள் ஆனால் புலிகள் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வலிமை பெற்று நிமிர்ந்தார்கள் எனவும் அவ்வறிக்கைகூறுகின்றது.

தமிழீழமே மேலும் இப்போராட்டத்தினால் ஆறாயிரம் பொதுமக்களினதும் அறுநூற்றி எண்பத்து மூன்று விடுதலைப் புலிகளினதும் இரத்தத்தால் சிவந்தது. புதிய வரலாறு படைக்கப்பட்டது. சிறிய தேசம் தான், மக்கள் பலம், மனவலிமை, இலட்சிய உறுதி, அசையாத தலைமை, எதற்கும் சளைக்காத போராளிகள் அடக்க முடியவில்லை. அழிக்க முடியவில்லை. உலகின் இன்னுமொரு வல்லாதிக்கம் அதன் வரம்புகளைப் புரிந்து கொண்டது. தமிழ் பேசும் மக்கள்தம் வலிமையை உலகம் புரிந்து கொண்டது.

தமிழ் தேசிய இனத்தின் வெற்றி உலகில் அடிக்கப்படும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு வழிகாட்டும் எனவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருடர்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழற்றல் போன்ற முன்னர் நடைபெற்றுவந்த திருட்டுக்கள் தற்பொழுது ஓரளவு நடைபெறுவதாகவும், அதனை உடன் நிறுத்துமாறும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

## பெருமாளை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமாளைக் கொண்டுசென்று புகலிடமளித்திருக்கிறீர்களா? என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது இது அரசியல் கேள்வி, எமக்கு அப்பாற்பட்ட விஷயம் ஆனாலும் நாம் கொண்டுசெல்லவில்லை என்பதே எனது பதில் என்று கல்கத் கூறினார்

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த ஆயிரத்துநூற்றிப்பதினைந்து பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டாயிரத்து முந்நூற்றி எண்பத்துநான்கு பேர் காயமடைந்தனர் என்றும் ஜெனரல் கல்கத் தெரிவித்தார்.

## பரீட்சை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் கோரியுள்ளனர். இம் மோசடிகளில் ஈடுபடுபவர்களைக் கண்டறிய அரசு உத்தியோகஸ்தர்களுக்குத் தாம் உதவி வழங்கப் போவதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கலந்துரையாடலின் பின்னர் இதுபற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பெரியாஸ் பத்திரியின் குறைபாடுகள், கட்டிட வசதிகள் என்பன இங்கு ஆராயப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பாலயடிவெட்டையில் லோறன்ஸ்நல்லடக்கம்

(மட்டக்களப்பு)

கடந்த பத்தொன்பதாம் திகதி மரணமடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கணேசராசாவின்(லோறன்ஸ்) பூதவுடல் அவரது சொந்த இடமான பயெடிவெட்டையில் அடக்கம் செய்யப்பட்டது. இவரது மரண ஊர்வலத்தில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்புத்தளபதி கருணா, மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் கருணா, றீகன் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 14-03-1954 வீரமரணம்: 22-03-1987

## லெப்டினன் சஞ்சீவி (மீசை)

**செல்லப்பா கங்காதரன்**
**8 ஆம் கட்டை, மல்லாகம்.**

பார்போற்றும் தமிழினத்தின்
பழி துடைக்கப் புறப்பட்ட
இள வேங்கையே
வீரர் குலவிளக்கே
மண் மீட்க மரித்தவனே எம்
மனங்களிலே நிலைத்தவனே
மலருமெம் ஈழத்திலே
மணம் வீசி திகழ்ந்திருப்பாய்.

(B.142)

பெற்றார், சகோதரர்கள், மைத்துனர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது